தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, தை 29 (11-2-'61) சனிக்கிழமை | இதழ் 34

பகை தந்த பரிசு!

அவர்கள் இருவரும் முடியுடை வேந்தர்கள். ஒருவன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன். மற்றொருவன் சோழன் பல்வேல் தடக்கைப் பெருவிறற் கிள்ளி. (வேற்ஃறடக்கை பெருவிறற் கிள்ளி என்றும்சொல்வர்)

இருவரும் கொடைச்சிறப்பும் படைச்சிறப்பும் மிக்கவர்கள். இருவரும் வெம்போர் மறவர்கள்-முன்வைத்த காலைப் பின் வைக்காத மான வீரர்கள்.

இருவருக்கும் இடையில் என்ன காரணத்தாலோ பகைமூண்டது. பகையைச் சிறுகச்சிறுக ஆற்றியிருந்தால் எத்தனையோ காரியங்களுக்கு இருவரும் பயன்பட்டிருப்பர். ஆனால், கைமிஞ்சி விட்டது.

பகையைக் குறைத்து உறவை வளர்க்கும் நடுநிலையாளர் எவரும் தலையிடவில்லை. எனவே, வளர்ந்து வைரம் கொண்டது பகை.

ஒருவரையொருவர் சாய்த்து மாய்த்துவிட முனைந்தனர். அதன் விளைவு பெரும்போராக உருவெடுத்தது.

இருவரும் படைகளைத் திரட்டிக்கொணர்ந்து அணிவகுத்தனர்.

தேர்ப்படைக்கு எதிராகத் தேர்ப்படை நின்றது. அந்தத் தேர்வீரர்களின் முதன்மையான ஆயுதம் வில்-அம்பு; ஆகவே, தேர்களில் வில்லும் அம்பும் ஏராளமாக இருந்தன. வேல், வாள், தண்டம், சூலம், கோடரி, முதலிய ஆயுதங்களும் தேர்களில் ஏராளமாக இருந்தன. வில்வீரர்கள் தேரில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தனர்.

யானைப் படைக்கு எதிராக யானைப்படை நின்றது. அந்த யானைகளின் முகங்களில் கவசமாகவும் அழகு மிளிரவும் உலோகங்களால் செய்த உறுதியான முகபடாம்கள் அணியப்பட்டு இருந்தன. யானைகள் ஒவ்வொன்றின் கையிலும் நீண்ட இரும்பு உலக்கைகள் சுழன்றுகொண்டிருந்தன. கொம்புகளில் தங்கப்பூண்கள் மின்னிக்கொண்டிருந்தன. யானையின் முதுகில் சிறிய வீடுபோல அமைக்கப்பட்ட அம்பாரி இருந்தது. அந்த அம்பாரி நிறையப் பலவகை ஆயுதங்கள் இருந்தன. அந்த ஆயுதங்களுக்கு நடுவே வேலேந்திய வீரர்கள் விழிகள் சிவப்பேற நின்றனர்.

குதிரைப் படைக்கு எதிரே குதிரைப்படை நின்றது. ஒவ்வொரு குதிரையிலும் வாளும் வேலும் ஏந்திய மறவர்கள், பரிசையும் கடிவாளத்தையும் பற்றிக்கொண்டிருந்தனர்.

அடுத்தது காலாட்படை. மேல் கடலும் கீழ்கடலும் கரைபுரண்டு சந்திப்பதுபோல் இருந்தது, அந்தக் காட்சி.

காலாட்படை இரண்டு பிரிவாக இருந்தது. வாளும் கேடகமும் தாங்கிய காலாட்படை ஒருபுறமும், வேலும் கேகடமும் தாங்கிய் காலாட் படை மற்றொரு புறமுமாக நின்றன.

'மாசரா'

இவ்வாறு நால்வகைச் சேனைகளும் அணிவகுத்து நின்றன. நால்வகைப் படைவீரர்களிடத்திலும் உடைவாள் ஒன்று இருந்தது. வேறு எந்த ஆயுதமும் உதவமுடியாத நிலை ஏற்படும் போது உடைவாள் பயன்படுமல்லவா!

ஒருபுறப் படைகளின் மத்தியில் வானளாவிய கம்பத்தில் கட்டப்பட்ட புலிக்கொடி பறந்துகொண்டிருந்தது.

அதுதான் சோழனுடைய படை என்று எவரும் சொல்லிவிடலாம். அதே படைகளின் மத்தியில் ஓர் அழகான தேர் நின்றது. அந்தத் தேரின் உச்சியில் வெண்கொற்றக் குடை விரிக்கப்பட்டு இருந்தது; அந்தக் குடைக்கு முன்னால் தேரில் நடப்பட்ட கம்பம் ஒன்றில் அழகான புலிக்கொடி ஒன்று பறந்துகொண்டிருந்தது. அது, முந்திய கொடியைவிடச் சற்று சிறியதாக இருந்தது. அந்தத் தேரில் சோழன் பல்வேல் தடக்கைப் பெருவிறற் கிள்ளி புலிப்போத்துப்போல நின்றான்.

எதிர்ப்படை வரிசையில் விற்கொடி வானத்தைத் தொட்டு ஆடிக்கொண்டிருந்தது.

வெண்கொற்றக் குடை விரித்து விற்கொடி நாட்டிய தேரில், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் சிங்க ஏறு போல நின்றான்.

போருக்கு என்று குறிப்பிட்டிருந்த நேரம் வந்துவிட்டதை கோள்நூல் அறிஞர்கள் சோழனிடம் அறிவித்தனர்.

சோழன், தனக்கு அண்மையில் தேரில் இருந்த தலைமைத் தளபதியாரின் முகத்தை நோக்கினான்.

தளபதி ஆயத்தமாக வைத்திருந்த வெற்றிச் சங்கை முழக்கினார். சங்கநாதம் நின்ற அதே நொடியில், யானையின்மீது இருந்த வீரமுரசம் தடாம்-தடாம்-தடாம் என்று மூன்று முறை முழங்கி ஓய்ந்தது.

சோழனுடைய முரசு முழங்கி நின்ற நொடியில் சேரனுடைய படை வரிசையிலிருந்துவெற்றிச் சங்க முழக்கம் எழுந்தது. தொடர்ந்து சேரனுடைய வீர முரசும் மும்முறை ஆர்த்தது.

இருதரப்புப் படைவீரரும் "போருக்கு ஆயத்தமா - ஆயத்தம்" என்கிற கேள்வியும் பதிலும் சங்கு-முரசு முழக்கங்களால் போர்க்கள மரபுப்படி அறிவித்து விட்டனர்.

பிறகு, ஒரே நேரத்தில் இருதரப்பு படை வரிசையிலிருத்தும், ஏராளமான முரசங்களும்; பல்வேறு வாத்தியங்களும், முழங்கின. தொடர்ந்து வாளோடு வாள்; வேலோடு வேல்; யானையுடன் யானை; குதிரையுடன் குதிரை; தேருடன் தேர்; எதிர் எதிராக வளைந்துகொண்டுபோர் செய்யத் தொடங்கின. வீரர்கள் ஆர்ப்பரித்தார்கள்.

ஆயுதங்கள் ஒன்றோடு ஒன்று தாக்குகின்ற ஓசையும், இடைவிடாமல் முழங்குகின்ற வாத்தியங்கள்-முரசங்களின் முழக்கமும், காலறுந்து வீழ்ந்தவர், கை துண்டிக்கப்பட்டு வீழ்ந்தவர், பெரும்புண்கள் ஏற்பட்டு ஆற்றல் அழிந்து வீழ்ந்தவர், ஆகியோரின் அவலக்குரலும் சேர்ந்து காது செவிடுபடும்படியாக இருந்தது.

முதலில் சற்று மந்தமாக இருந்த போர்க்களம், நேரம் ஆக ஆக வெறிக்களமாக மாறியது!

சோழன் படைவரிசையில் காலாட்கள் முற்றும் அழிந்துவிட்டபோது, சேரன் படையில் எஞ்சியிருந்த காலாட் படையினர், சோழனுடைய குதிரைப் படையை வளைத்துக்கொண்டனர்.

சேரன் படை வரிசையில் குதிரை வீரர்கள் முற்றும் அழிக்கப்பட்டபோது, சோழன் படையில் எஞ்சியிருந்த குதிரை வீரர்கள் சேரனுடைய யானைப் படையை வளைத்துக்கொண்டனர். இப்படி இருதரப்பிலும் அணிவகுப்பே சிதறிவிட்டது.

கடைசியில் இரு திறத்துப் படைகளிலும் சேரனையும் சோழனையும் தவிர, மிஞ்சியவர் ஒருவரும் இல்லை; மாமன்னர்கள் இருவரும் தேரிலிருந்துகொண்டே ஓயாத ஒழியாத கணை மழை பொழிந்தனர்.

இருவருடைய தேர்ப்பாகர்களும் அம்புகளுக்கு இரையாகி ஒழிந்தனர். இருவருடைய தேர்க் குதிரைகளும் செத்தொழிந்தன. இருவருடைய கொற்றக்குடைகளும் தேரிலிருந்து சாய்ந்து வீழ்ந்து விட்டன.

முடிவில் சேரனிடமிருந்த அம்புகள் அத்தனையும் செலவாகிவிட்டன. எனவே அவன் வில்லை எறிந்துவிட்டு வாட்போருக்குக் கிளம்பினான். வலக்கரத்திலே வடிவாளும் இடக்கரத்திலே கேடகமும் ஏந்தித் தேரைவிட்டுக் கீழே குதித்தான்.

(4-ம் பக்கம் பார்க்க)

கல்லூரிக் கவியரங்கம்

கண்ணதாசன் அவர்களின் அன்னை விசாலாட்சி ஆச்சியின் நினைவாக, காரைக்குடி அழகப்பா தமிழ்மன்றம் நடத்திய அனைத்துக் கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிதை.

எது இன்பம்?

கா. வேழவேந்தன், பீ.ஏ., (சட்டக்கல்லூரி) சென்னை.

தொட்டிலிலே பிஞ்சாகக் கிடந்த நேரம்
தூங்கஅன்னை 'ஆராரோ' இசைத்த தின்பம்!
சிட்டைப்போல் கிளையினின்று மடுவில் தாவி
சிறுவயதில் நீந்தியது இன்பம்! தேக்குக்
கட்டிலிலே பருவத்தில் மங்கை தந்த
கன்னலினைப் பருகியது இன்பம்! பின்னர்
கட்டவிழ்ந்த நரைவயதில் திண்ணை மீது
கதைபேசல் இன்பமடா! இதுதான் வாழ்க்கை!

சோற்றினிலே முழுஇன்பம் கண்டோன் 'மண்ணின்
சுமை'என்ற பட்டத்தைப் பெற்றான்! இரத்தச்
சேற்றினிலே பகைமுடித்தல் இன்பம் என்றோன்
சேரனைப்போல் பெரும்புகழைப் பெற்றான்! குன்றின்
ஊற்றைப்போல் எழுத்தினிலே இன்பம் கண்டோன்
ஒப்பற்ற இளங்கோபோல் ஆனான்! அன்புக்
கூற்றாலே வையகத்தில் இன்பங் கண்டோன்
குணக்குன்று புத்தனைப்போல் போற்றப் பெற்றான்!

மொழிவாழ, இனம்வாழ, நாடு வாழ
மூச்சுவிட்டோர் நடுகல்லே இன்பச் சின்னம்!
விழிஇமைத்தல் காணாமல் பகைவன் விட்ட
வேல்வாங்கிப் பெற்றபுண்ணே இன்பச் சின்னம்!
'பழிசெய்தேன்' எனப்பதறி வெட்டிக் கொண்ட
பாண்டியனின் பொற்கைதான் இன்பச் சின்னம்!
அழியாத தமிழ்கேட்டு அழிந்தான் என்ற
அரசனந்தி வரலாறே இன்பச் சின்னம்!

நீலவண்ண வான்மடுவில் துள்ளும் மீன்கள்
நீங்காத பேரின்பம் கவிஞ னுக்கு!
வாலிளமைக் குமரியவள் தைத்த பார்வை
மயக்குகின்ற நல்லின்பம் இளைஞ னுக்கு!
சூலவிழ்ந்த நெற்கதிர்கள் தலைய சைத்தல்
சொக்கவைக்கும் இன்பமடா உழவ னுக்கு!
கோலஎழிற் சிலதன்னைப் புகழ்ந்து மற்றோர்
கூறும்சொல் மிகவின்பம் கலைஞ னுக்கு!

கூகைக்கோ கும்மிருட்டு இன்பம்; ஆனால்
கொத்துகின்ற காக்கைக்கோ பகல்தான் இன்பம்!
ஈகைகொன்ற திருடருக்குக் களவே இன்பம்;
எடுத்தளிக்கும் வள்ளலுக்கோ அறமே இன்பம்!
தோகைமயில் ஆடுதற்குக் கார்தான் இன்பம்;
சோலையில்வாழ் இசைக்குயிற்கு வேனில் இன்பம்!
ஆகையினால் ஒன்றுக்கு ஒன்றில் இன்பம்;
அடுத்தவர்க்கோ அதுதுன்பம். விந்தைச் சட்டம்!

சேற்றிலுள்ள தவளையதன் புலம்ப லில்தான்
சீறிவரும் பாம்புக்கு இன்பம்; வானக்
காற்றுதவழ் புறவினது குருதி யில்தான்
கழுகுக்குச் சுவையின்பம்; அதுபோல் துள்ளி
ஆற்றோடும் அயிரைமீன் அழுகை யில்தான்
ஆவென்று வாய்திறக்கும் வாளைக் கின்பம்!
மாற்றாரின் விழிநீரில் இன்பங் காணும்
மாக்கொடுமைச் சட்டத்தைப் படைத்தோன் எங்கே?

துப்பாக்கி ஓசையிலே இன்பங் கண்ட
தூய்மையற்ற இட்லரினை உலகம் தூற்றும்!
எப்போதும் மறுகன்னம் காட்டல் இன்பம்
எனச்சொன்ன ஏசுவினை உலகம் போற்றும்!

செப்பாலே உருவான காசை எண்ணிச்
சேமித்தல் இன்பமென்றோர் மண்ணாய்ப் போனார்;
'இப்புலவன் வறுமைக்குத் தலையைத் தந்தேன்'
எனச்சொன்ன குமணவள்ளல் நெஞ்சில் நின்றான்!

புழுவுக்குச் சாக்கடைதான் இன்பம்; வீழ்ந்து
புரளுகின்ற பன்றிக்குச் சேறு இன்பம்;
அழுகிவிட்ட தசையொன்றே ஓநாய்க் கின்பம்;
அடுத்தவரின் அவலந்தான் தீயோர்க் கின்பம்!
வழுவறியாச் சிறுவயதில் தும்பி வாலில்
வதைபுரியும் முள்குத்திப் பார்த்தல் இன்பம்;
செழுமையுற்ற அறிவாளன் அவனே யானால்
திருக்குறளின் அறப்பாலில் இன்பங் காண்பான்!

மலைப்பெண்ணாள் முத்தாரம் அருவி, அந்த
மங்கைநல்லாள் எடுத்தணிந்த பசும்பூ வாடை;
தலைமோதும் கனிந்தபலா; அதைப்ப றித்துத்
'தம்த'மென்று முரசொலிக்கும் மந்திக் கூட்டம்;
கலைமானின் குதிப்பாய்ச்சல்; கரிய பாறை
கைகால்கள் முளைத்ததுபோல் அசையும் யானை;
வலைவீழா செம்போத்து இவைக ளெல்லாம்
வளமார்ந்த கற்பனைக்கு இன்பக் காட்சி!

"எனைஉனக்கு நான்தந்தேன், உன்னை நீயும்
எனக்கேநீ தா'வென்று வணிகம் பேசி
பனைத்தோப்பில் மாங்காட்டில் அவளைக் கண்டு
பழச்சாற்றைப் பகிர்ந்துண்ட பின்னர் தூய
வினைமணத்தை முறையோடு முடித்துக் காட்டி
விண்மதியும் குளிரும்போல் இணைந்து கொஞ்சி
தினைக்காட்டுக் கிள்ளைகளாய்ச் சிரித்து வாழ்தல்
சீரார்ந்த இல்லறத்து இன்பக் காட்சி!

ஓயாத வறுமைப்பேய் தழுவி நிற்க
ஒருபருக்கைச் சோற்றுக்குத் தெருவில் ஓடும்
நாயோடு போராடி நலிந்து தேய்ந்து
நரம்புதசை இற்றுப்போய் எலும்பாய் ஆகி
சாயாத உடல்சாய்ந்து உயிர்போ காமல்
தத்தளிக்கும் பிறவிக்குக் கயிறு ஒன்றே
ஓயாத அமைதியின்பம் அளிக்கும்! பாவம்;
உயிர்மாய்த்தல் அவனுக்கு இன்பக் காட்சி!

காக்கைக்கு வேம்புதரும் கனிதான் இன்பம்;
காமுகர்க்கு வேசையரின் உடல்தான் இன்பம்;
தீக்குணத்துத் தேளுக்குக் கொட்டல் இன்பம்;
தினவெடுத்த வல்லரசுக் கணுகுண் டின்பம்;
சாக்குருவிக் கடுத்தவரின் இறப்பில் இன்பம்;
தணலுக்குக் கரியாக்கிக் காணல் இன்பம்;
ஆக்குதலில் சிலபேர்க்கு, இன்ப மில்லை;
அழித்தலில்தான் இன்பத்தைக் கண்டார் விந்தை!

கொடைமடந்தான் இன்பமென்றான் பாரி; அந்தக்
கோமகனைப் பாடாத செந்தா இல்லை!
படைமடம்ப டாதிருத்தல் இன்ப மென்றே
பார்வேந்தன் இரும்பொறையோ சிறப்புப் பெற்றான்!
நடைமாத ரேஇன்பம் என்று வீழ்ந்து
நலிவடைந்த சச்சந்தன் இகழப் பெற்றான்!
கடைநிலைவாழ் பசிமக்கள் துயர்து டைத்து
கன்னிமணி மேகலையும் இன்பங் கண்டாள்!

அவலத்தை அடைந்தாலும் கண்ணீர்; மிக்க
அகமகிழ்ந்து நகைத்தாலும் கண்ணீர்! நுட்பத்
திவலைகளாய் நீர்காற்றில் மிதத்தல் போலே
தேக்கிஉடல் கண்ணீரை வைத்தி ருக்கும்!
கவலையற்ற சிரிப்பாலே அதுதோன் றட்டும்;
கதிகலங்கி அழுவதனால் கண்ணீர் வேண்டாம்!
குவலயத்தின் புறவெளியில் எதுவும் இல்லை;
குடிகொண்ட நெஞ்சில்தான் உண்டு இன்பம்!

கயிற்றினையே பாம்பென்போன் கோழை; அந்தக்
கடைமடையன் இன்பத்தைக் கண்ட துண்டா?
எயிற்பாம்பைக் கயிறென்போன் வீரன்; அன்னோன்
இவ்வுலகில் அச்சமொழித் தின்பம் கண்டான்!
பயிர்செழிக்க உரம்வேண்டும்; அதுபோல் இன்பப்
பழம்சுவைக்க உள்ளத்தில் உரம்தான் வேண்டும்!
'உயிர்இன்றே பிரியட்டும் மகிழ்ச்சி' என்ற
உறுதியுடன் வாழ்வதுதான் இன்பம், இன்பம்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 11-2-'61 | இதழ் 34

குறைநோய்க் கிருமிகள்

மலையாகத் தோன்றிய வேலூர் விளைவு, பனியாக மறைந்து 7 நாட்கள் ஆகிவிட்டன.

அந்தச் சம்பவங்களுக்குக் காரணப்பொருளாகப் பாவிக்கப்பட்ட தலைவர்கள் 'திரைந்தபால்' என்ற பெயருக்கு ஆளாகாமல், 'கறந்தபால்' என்ற பெயருக்குப் பாத்திரமாகிவிட்டார்கள்.

இத்தனையும் அறையில் நடந்ததல்ல-அம்பலத்தில் நடந்தது - அனைவரும் அறிந்தது.

ஆனால், தூணைத் துரும்பாக்கி துரும்பைத் தூணாக்கிக், கதை கட்டிவிடும் சூத முனிவர்களும் - வேதவியாசர்களும்-காங்கிரசின் இன்றைய ஈரற்குலையில் நுழைந்த குறை (க்ஷய) நோய்ப் புழுக்களைப் போலிருந்துகொண்டு பத்திரிகை வாயிலாகக் கிளப்பிவிடும் 'இருமல் ஒலி' நோய் பரப்பு முறை இன்னும் அடங்கிய பாடாக இல்லை.

தாளிதப் புகையைக்கூடத் தாங்காத குறைநோயாளர்க்கு. சற்றே எரிச்சலுடன் வெளிவந்த வேலூர்ப் புகை, கடினமான இருமலைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

சென்னையிலிருந்து வெளிவரும் குறைநோயாளர் நாளேடு ஒன்றில் 8-2-61 ல் வந்த செய்தித் தலைப்புகளைச் சான்ருகக் காண்போம் :—

தி. மு. க. சமரஸம் : கருணாநிதி கோஷ்டி எதிர்ப்பு.

சென்னை நகர சபையில் தி. மு. க வுக்கு புதுத்தோல்வி.

ரகளைக்குக் காரணம் : எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்.

சம்பத் பலம்—கண்ணதாசன் கருத்து.

காந்திபோன்ற தலைவர் நமக்கில்லையே—சம்பத் ஏக்கம்.

நடைபாதை வர்த்தகருக்குத் தலைவலி வருகிறது. லைசென்ஸ் கட்டணத்தை உயர்த்த தி. மு. க. யோசனை.

ஒருநாள் ஏட்டில் ஒரே பக்கத்தில்-அதுவும் முன்பக்கத்தில் செய்திகளுக்குக் கொடுத்திருக்கும் தலைப்புகளே இவை.

செய்திகளின் தரமும் தன்மையும் எப்படி ?

மென்மையை வன்மையாக்கி, வன்மையை மென்மையாக்கி, உருண்டையை நீளமாக்கி, நீளத்தை உருண்டையாக்கி, வெட்டக்கூடாததை வெட்டி, ஒட்டக்கூடாததை ஒட்டி, கண், மூக்கு, காது, வால் வைத்துச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தக் குறைநோய்க் கிருமிகளின் உள்நோக்கம் "தமது சந்ததியார்களை தி. மு. கவின் மார்புக்குள்ளேயும் நுழைத்துவிடமாட்டோமா !" என்கிற விரக வேதனையே தவிர வேறில்லை.

அந்த விரக வேதனையின் காரணமாக தமது அறிவீனம் அம்பலமாவதைக் கூடப் பொருட்படுத்தாமல், உளறிக்கொட்டியிருப்பதைக் காணும்போது, நம்மால் நகைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த உளறல்களின் 'வேராக' விளங்குவது தி. மு. க. தலைவர்களிடையே கோஷ்டிகள் இருப்பதாகக் கதைப்பதுதான் !

அண்ணுவுக்கும் சம்பத்துக்கும் இடையே தோன்றிய பிணக்கைப் 'பிளவு' என்பதோ, கோஷ்டி என்பதோ, பிணக்கிற்கும் பிளவுக்கும் பொருள் வேற்றுமை தெரியாதவர்களின் பேச்சென்றே சொல்லவேண்டும்.

பிணக்கல்ல-பிளவு-பிளவேதான் என்று மனதார நினைப்பவர்களுக்கு மட்டும் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிருேம்.

அண்ணு அவர்கள் கழகத்தின் முழு முதல் தலைவர் என்று ஒப்புக்கொள்வதில், கழகத்தவர்க்கு மட்டுமல்ல-கறுவிக்கொண்டிருப்பவருக்கும்கூட கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

ஆதலால். அண்ணு அவர்கள் தமக்கொரு கோஷ்டி சேர்த்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் அற்றவராகிவிடுகிருர். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறவருக்குக் கோஷ்டி எப்படி ஏற்படும் ?

அடுத்தபடியாக சம்பத் நிலைமை என்ன ? கழகத்தின் கண்ணுக - காதாக வாயாக-கருதப்படும் தலைவர்களில் சம்பத்தும் ஒருவர். அவர் ஒரு கோஷ்டி சேர்த்திருக்கிருர் என்ருல், எதிர்க்கோஷ்டியும் இருக்கவேண்டுமே ! அந்த எதிர்க்கோஷ்டி யாருடைய கோஷ்டி ? அப்படி எதுவும் இல்லை !

கோஷ்டிகள் தோன்றுவதற்குரிய காரணங்களும் இல்லை. கோஷ்டிகள் தோன்றுகின்ற காரணங்கள் எவை ? அந்தக் காரணங்கள் தி. மு. கவில் உள்ளனவா ? என்கிற விவரங்களை அறிவது நல்லது.

பதவிப் பூசல்களால் கோஷ்டி சேரலாம்.

நிர்மாணத் திட்டங்களை எதிர்த்துக் கோஷ்டி சேரலாம்.

ஒரு அரசியல் விடுதலை இயக்கத்தில் கோஷ்டி சேர இந்த இரண்டு காரணங்களைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது.

இதன்படி பார்த்தால், சம்பத்திற்கு பதவியில்லாமல் இருந்திருக்கவேண்டும். ஆனால், கழகத்தின் முழு முதற்பீடமான அவைத்தலைவர் பதவியில், சம்பத் இருந்தார். ஆகவே, சம்பத் பதவிக்காகக் கோஷ்டி சேர்த்திருக்கிருர் என்று சொல்லிவிட முடியாது. அவர் அப்படிப்பட்ட முயற்சி செய்யவேண்டிய அவசியமே இல்லாதபோது, இத்தகைய ஆராய்ச்சி அநாவசியம். அடுத்தது நிர்மாணத்திட்டங்களில் பிளவுபட்ட கோஷ்டியா என்பதுதான்.

கழகத்தின் நிர்மாணத்திட்டங்களில், சம்பத் மாறுபட்டதால் ஏற்பட்டதல்ல வேலூர் நிகழ்ச்சி. இது நாடறிந்த ஒன்று.

கழகத்தின் ஒரு சாரார் 'ஓட்டு முறையில்தான் திராவிடம் பெறவேண்டும்' என்று தீர்மானிக்கும்போது 'ஆகாது கூடாது வேட்டு முறையில்தான் திராவிடம் பெறவேண்டும்' என்று யாரும் சொன்னதில்லை.

இந்தியை இப்போதே எதிர்க்க வேண்டும் என்று கழகத்தின் ஒரு சாரார் தீர்மானிக்கிறபோது 'வேண்டாம் வேண்டாம் திராவிடம் விடுதலை பெற்றவுடனே இந்தியை ஒழித்துவிட்டால் போதும்' என்று யாரும் சொன்னதில்லை.

மத்திய மாநில அரசுகளை எதிர்த்துப் போர் தொடங்கவேண்டும் என்று கழகத்தின் ஒரு சாரார் தீர்மானித்தபோது, அப்படிச் செய்யக்கூடாது, மாநில ஆட்சியை விட்டுவிட்டு மத்திய ஆட்சியை மட்டும் எதிர்க்கலாம் என்று யாரும் சொன்னதில்லை. இதுவரை எந்த நிர்மாணத்திட்டம் பற்றிய தீர்மானங்களும் ஒருமுகமாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சுதந்திராக் கட்சியுடன் கூட்டுச் சேரலாமா ? கம்யூனிஸ்டுடன் சேரலாமா ? இரண்டிலுமே சேரலாமா ? இரண்டிலுமே சேரக்கூடாதா ? என்பனபோன்ற முடிவுகளில்கூட முரண்பாடுகள் தோன்றியதில்லை.

இதுபோன்ற நிர்மாண வேலைத் திட்டங்களில் மனவேற்றுமை வளர்ந்ததால், கோஷ்டிகள் தோன்றியது என்று எவரும் சொல்லமுடியாது.

உண்மைநிலை இப்படி இருக்கும்போது தி மு. க வின் பகைவர்கள், எதைக் கண்டு 'கோஷ்டி கோஷ்டி' என்று. கூக்குரல் இடுகிருர்கள் ?

அவர்களுக்கு ஆதாரமாக இருப்பதெல்லாம் அண்ணு அவர்களுக்கும் சம்பத்துக்குமிடையில் தோன்றிய 'பிணக்கு' ஒன்று தவிர வேறில்லை.

'பிணக்கு' என்பதற்கும் 'பிளவு' என்பதற்கும், பொருள் வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமையாகும்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் தோன்றுகிற பிணக்கை 'ஊடல்' என்ற சிறப்பான ஒரு சொல்லால் தமிழ்மொழி கூறுகிறது. ஊடலின் தன்மை விண்சந்தேகந்தான். வள்ளுவர், புரியாதவர்க்கும் புரியவேண்டும் என்று ஊடலையே நடத்திக் காட்டியிருக்கிருர், திருக்குறளில் :—

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள்"

"காதல் மிகுதியினல் இந்தப் பிறப்பில் நான் உன்னைப் பிரிந்திருக்கமாட்டேன் என்றேன். அப்படி என்ருல் அடுத்த பிறப்பில் என்னைப் பிரிவேன் என்றுதானே அருத்தம்" என்று. அழுதாள் அவள்.

"யாரினும் காதலம் என்றேனு ஊடினுள்
யாரினும் யாரினும் என்று"

"உனக்கும் எனக்கும் இடையில் இருக்கும் காதல், மற்ற யாரும் அடையாத பெருங்காதல் என்றேன். அப்படியானல் பல பேரைக் காதலித்திருப்பதாகத்தானே அருத்தம்" என்று கோபித்துக்கொண்டாள்.

இவைதான் ஊடல். இதே ஊடல், அண்ணன் தம்பி தாய் தந்தையருக்கிடையே தோன்றினுல் அதுவே பிணக்கு.

"நேற்று நான் தூங்கும்போது எனக்குத் தெரியாமல் அப்பாவுடன் சினிமாவுக்குப் போனுய் அல்லவா ? பார் ! நான் அம்மாவுடன் நாடகத்துக்குப் போகும்போது உனக்குச் சொல்லமாட்டேன்"

இது அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் வரும் பிணக்கு.

"அப்பா ! அக்காளுக்கு 50 ருபாய் விலையில் பட்டுச் சேலை வாங்கினீர்கள். எனக்குமட்டும் 6 ருபாய்க்குள் சட்டையும் வேட்டியும் வாங்கி இருக்கிறீர்கள், நான் இந்த சட்டையைப் போடமாட்டேன் ! வேட்டியையும் தொடமாட்டேன் !"

இது தகப்பனுக்கும் மகனுக்கும் இடையில் ஏற்படும் பிணக்கு.

இத்தகைய பிணக்குகளை 'பிளவு' என்று சொல்பவர்கள் யாராக இருப்பர் ?

அண்ணுவுக்கும் சம்பத்திற்கும் இடையில் பிணக்கு வந்த காரணம் என்ன ? எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஆனுலும் அதன் நுண்ணிய கருத்தைச் சற்று விளக்குவது நல்லதே.

அண்ணுவின் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' கட்டுரையில் ஜனநாயத்திற்கு மாசு கற்பிக்கும் அமைப்புகள் இருப்பதாகச் சம்பத் கருதினர். அக்கட்டுரையின் வாயிலாக அண்ணுவின் ஜனநாயகப் பண்புக்கு இழுக்கு நேராமலும், உண்மை துலங்கும் வழியாகவும். இருக்குமென்று கருதியே, "அண்ணுவின் மன்னன்" கட்டுரையை சம்பத் எழுதினர்.

அண்ணுவின் முழுமுதல் தலைமைக்கும் நாட்டின் 'ஆதர்சபுருஷர்' என்கிற பெருமைக்கும் சம்பத்தின் கட்டுரை இழுக்காக அமைந்துவிட்டதென்று. வேறு தலைவர்கள் கருதினர்கள்.

அந்தக் கருத்துக்களைப் பரிமாறுவதற்கென்றே முன்னறிவிப்புச் செய்து பரிமாறி இருந்தால். பிணக்கு எதுவுமே தோன்ற வழியிராது. ஆனுல் சற்று அவசரப்பட்டுப் பரிமாறவே, பலவித யூகங்களும், ஹேஸ்யங்களும், ஆதாரமில்லாமலே தோன்றி, ஆதாரமற்ற காரணத்தாலேயே மறைந்தும் போயின.

தாளிதப் புகை கண்டாலே இருமலைக் கிளப்பும் விஷக் கிருமிகள், இந்த அளவு மிளகாய் வற்றல் புகைபட்டால் சும்மா இருக்குமா ? வருடக் கணக்காக இருமினுலும் அதிசயமில்லை ! ஆனுல் நாம் அந்தக் கிருமிகளுக்கு இருதயத்தில் இடம் தராதபடி ஆக்க வேலைகளில் ஈடுபடுவோமாக,

(முதற் பக்கத் தொடர்ச்சி)

பகை தந்த பரிசு

வாளேந்தி வந்தவன்மேல் வில்லேந்தி அம்பு தொடுப்பது போர்க்களத்தில் அறமாகாது. ஆதலால், சோழனும், வாளும் கேடகமும் ஏந்தித் தேரிலிருந்து தரையில் குதித்தான்.

புலியேறும் புலியேறும் சீறிப் பாய்வதுபோல், ஒருவர்மீது ஒருவர் பாய்ந்தனர். வாள்கொண்டு தாக்கினர். இடசாரி வலசாரியாகச் சுழன்றனர். ஒருவர்க்கொருவர் இளைத்தவராக இல்லை,

ஆனுல்,சோழன் கையிலிருந்த வடிவாள் சேரனுடைய தாக்குதலால் நடுவில் ஒடிந்து வீழ்ந்தது. அதை வீசி எறிந்துவிட்டு நெடிய வேலாயுதத்தை ஏந்திக் கொண்டு சிங்கம்போல் கறுவினுன் சோழன்.

போர்க்கள அறப்படி சேரனும் வடிவாளை வீசிவிட்டு, வேலாயுதத்தை ஏந்தி நின்று புலிபோல் உறுமினுன்.

சிறிதுநேரம் தொடர்ந்து வேலால் ஒருவரையொருவர் தாக்குவதும் தடுப்பதுமாகப் போர் புரிந்தனர். முடிவில் இருவரும் களைத்துப் போயினர்.

போரை நிறுத்திவிட்டு இருவரும் சிறிதுநேரம் ஓய்ந்திருந்தார்கள். களைப்பு அடங்கியதும் மீண்டும் போர் தொடங்கியது.

ஒருவரையொருவர் "ஒழித்துக் கட்டாமல் விடுவதில்லை" என்று கொடுஞ்சூள் உரைத்தனர். அதன்படி சாய்த்துவிடத் துடித்தனர். குத்துதல் - விலக்குதல்; எற்றுதல் - தட்டுதல்; பதுங்குதல்-பாய்தல்; ஒதுங்குவதுபோல் விலகி-உறுத்து மோதுதல்; இன்ன பிற போர் முறைகள் காட்டினர்! முடிவில் சோழன் கை ஓங்கிவிட்டது. சேரனுடைய மார்பில் தனது ஆற்றலை எல்லாம் சேர்த்துக்கொண்டு ஓங்கிக் குத்தினுன் வேலால்.

அதனை இடதுகையால் தட்டிவிட்டு பதிலுக்கு சோழனுடைய மார்பில் வேலால் குத்தினுன் சேரன்.

இருவருடைய வேல்களும் குறி தவருமல் இருவரின் மார்பிலும் இடம்பெற்று நின்றன. சோழன் தரையில் சாய்ந்து உயிர்நீத்தான். சேரன் குற்றுயிராக வீழ்ந்துகிடந்தான்.

புலவர் கழாத்தலையார் சேரனிடத்திலும் சோழனிடத்திலும் நட்புரிமை கொண்டவர். அவர் இந்தப் போர்ச் செய்திகேட்டு ஓடோடி வந்தார்—இருவரையும் சமாதானம் செய்து விடலாம் என்று.

ஆனுல், அவர் வருவதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. சோழன் பிணமானவன் எவரிடம் பேசப் போகிருன்? சேரன் ஒருவனே அந்த நிலையிலும் புலவரை வரவேற்ருன்! ஆற்றமுடியாத வருத்தத்துடன் சேரனுடைய பெருமைகளையும், சோழனுடைய பெருமைகளையும், குற்றுயிராகக் கிடக்கும் சேரனிடம் சொல்லி அழுது புலம்பினுர் புலவர் கழாத்தலையார்.

சேரனுக்கு புலவரின் பேரன்பு நெஞ்சை உருக்கி விட்டது. அவன் தனது கழுத்தில் கிடந்த விலைமதிக்க முடியாத மணியாரத்தை எடுத்து "புலவர் பெருமானே! என்னுடைய இறுதிப் பரிசிலாக இதனை ஏற்றுக் கொள்க" என்று புலவரின் கழுத்திலே சூட்டிவிட்டு உயிரையும் விட்டான்.

இதற்குள் சேர சோழ மன்னர்களின் கோப்பெருந்தேவியரும், இருதிறந்து படைவீரர்-தளபதிகள் - ஆகியவர்களின் காதல் மனைவியரும்,போர்க்களம் வந்து அவரவருடைய கணவன்மார் பிணங்களைத் தேடி எடுத்து மார் போடணைத்துக் கொண்டு அவர்களும் உயிர் நீத்தனர்.

புலவர் கழாத்தலையார் ஒருவரே அந்த அஞ்சத் தக்க போர்க்களத்தில் தனியொருவராக நின்று முற்றிலும் பார்த்தார். இந்தக் கோரக் காட்சியில் எவ்வளவு வேதனை கொண்டாரோ அவர்!

எண்ணற்ற யானைகள் அம்புகளுக்கு இரையாகி உயிர் நீத்துக் கிடந்தன. முன் நடந்த போர்களில் வெற்றியுடன் திரும்பி புகழ் பெற்ற குதிரைகளும், அதன் வீரர்களும் படுகளத்தில் பிணமாகிக் கிடந்தனர்.

தேரில் ஏறி வந்து வீரப்போர் புரிந்த சான்ருேர்கள் அனைவரும் தப்பாமல் கொல்லப்பட்டு அவர்கள் கையிலிருந்த தோலால் செய்யப்பட்ட கேடகங்கள் முகத்தை மறைக்கப் பிணமாகிக் கிடந்தனர்.

தோலால் இறுகக்கட்டிய வேலைப்பாடு மிக்க வெற்றி முரசங்கள் தேடுவாரின்றி உருண்டு கிடந்தன.

சந்தனம் பொருந்திய மார்புகளில் நெடிய வேல் பாய்ந்து வேந்தர் இருவரும் மண்ணிற் கிடந்தனர்.

இப்படி இருபெரு வேந்தர்களும் ஒருசேரப் போய்விட்டனரே இவர்களுடைய வளமிக்க நாடுகள் இனிமேல் என்னுகும்? என்று புலம்பினுர் புலவர் கழாத்தலையார்—புறம் 62—63.

கடுகினுட் புகுந்த களிறு

ச. சிவாஜி. பி. ஏ. பி. டி.,

கடுகு சிறிது; களிறு பெரிது. களிறு கடுகினுட் புகுதல் எங்ஙனம் முடியும்? விந்தையாயிருக்கிறதே. ஏதேனும் மயக்கமோ? அல்ல, அல்ல. உலகப் பேராசான் ஒருவர் களிற்றைக் கடுகினுட் புகுத்திக் காட்டிய வினையை - விந்தையைத் தவிர வேறல்ல.

இவ்விந்தையைச் செய்தவர் எந்நாட்டவரின் வணக்கத் திற்கும் உரியவர்; செந்தமிழால் மறை தந்த சிந்தனையாளர்; பேரொளி விளக்கப் பெருந் திறல் மாகவிஞர்; தெள்ளு தமிழ்த்தேன் மொழியால், குறளமுதம், அள்ளிக் கொடுத்த அமரர்; தீஞ்சுவையாம் பாதந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் தான்.

கவிஞன் கண்வழியே சென்று அவன் உள்ளத்தைத் தொடுபவை எவையுமே ஒரு தனிச் சிறப்பைப் பெறுகின்றன. குப்பையைக் கிளறுகின்ற கோழியானுலும், தேய் புரிபழங்கயிறுனுலும், அவை கவிஞன் கைப்பட்டுப் பெறுகின்ற சிறப்பே தனி. மோதிவருகின்ற அலையும், வானில் நீந்தி வருகின்ற நிலவும், சிவந்து எழுகின்ற ஞாயிறும், தவழ்ந்து செல்கின்ற மேகமும், நம் கண்ணுக்குக் காட்டுகின்ற வனப்பையும், கருத்துக்கு ஊட்டுகின்ற தெளிவையும் விட, கவிஞனுடைய கண்ணுக்குப் பேரெழிலையும், கருத்துக்குச் செறிவையும் தந்து விளங்குகின்றன.

குறிப்பாகத் திருவள்ளுவர் ஆளும் உவமைச் சிறப்பும், அணிநலமும் தனிஇடம் பெறுபவை. இன்னுெரு சிறப்பு என்னையோ வெனில் அது சொற்கட்டு - சொற்செட்டு, இவைகளால் சுருங்கக் கூறி விளங்க வைக்கும், தன்மை. அணுவைத் துளைத்தும் கடலைப் புகட்டுவர்; கடுகைத் துளைத்தும் கடலைப் புகட்டுவர். ஒன்றல்ல-இரண்டல்ல ஏழ்கடலைப் புகட்டுவர். கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டுகின்ற வள்ளுவருக்கு, களிற்றைப் புகுத்துவதில் என்னே தான் இடர்ப்பாடு? களிற்றைப் புகுத்தியதும் ஒரு முறையல்ல; இருமுறைஅல்ல; ஏழுமுறையும் அல்ல; எட்டு முறை புகுத்தி இருக்கிருர். பொருட் பாலிலே ஏழுமுறை; காமத்துப் பாலிலே ஒருமுறை.

இடனறிந்து செயற்படவேண்டுமென வலியுறுத்தவந்த வள்ளுவர், நமக்கு ஒரு அரிய காட்சியைக் காட்டுகின்ருர். பாகர்க்கு அடங்காத களிறு, ஒன்று; தனது நீண்ட கூரிய தந்தங்களை அசைத்து ஆட்டியவாறு ஓடி வருகின்றது.வேலேந்திய வீரர்கள் எதிர்ப்படுகின்றனர். வேலுக்கும் வீரர்க்கும் அது அஞ்சவில்லை. அவர்களை அப்படியே குத்திக் கோத்த வண்ணம் வந்து கொண்டிருக்கிறது. வழியிலே அகன்ற சேற்றுக்குழி ஒன்று-அதில் அதன் கால்கள் புதைகின்றன. அந்த நிலையிலே சிறு நரியொன்று அவ்வழி வருகின்றது. வேலையும் மதியாது வீரர்களைக் குத்திக் கோத்து வந்த அடங்காத களிற்றை அச்சிறுநரி கொன்று விடுகின்றது. "வேலாள் முகத்த களிற்றை, காலாழ்களரின் நரி அடுகின்ற (குறள்-500) காட்சியை வள்ளுவர் இங்ஙனம் காட்டுகின்ருர்.

தளராத ஊக்கம் உடையவர், தாம் நினைத்த உயர்வுக்கு ஊறுவந்த இடத்தும், தம் பெருமையை நிலை நிறுத்துகின்ற பான்மையைக் காட்ட "புதையம் பின்பட்டுப் பாடுன்றும் களிறை" (குறள்-597) நமக்கு எடுத்துக் காட்டு கின்ருர்.

வடிவால் பெரியது களிறு; வலிவால் பெரியது புலி. ஆனுல் புலி தாக்க நேர்ந்தால் யானை அஞ்சும். இதை(குறள்599) எடுத்துக் கூறி அணி நலம் சிறக்கின்ற வகையிலே ஊக்கம் இல்லாதவரின் நிலையினை எடுத்துக் கூறுகின்ருர்.

மதநீர் ஒழுகும் முகமுடைய மற்ருெரு யானை; அதன் துணை கொண்டு மற்ருெரு யானையைப் பிடிப்பதைக்காண்கிருர். உடனே ஆங்கொரு வாழ்வின் உண்மை மலர்கின்றது, அதுதான், செய்கின்ற வினையைக் கொண்டே பிறிதொரு வினையையும் முடித்துக் கொள்ள வேண்டுமென்பதாம். "வினையால் வினையாக்கிக் கோடல்" (678) தானே வினை செய்யும் வகையுமாகும்? அறிவுடையோர் செயலும் அது தானே?

அடுத்து நம்மை ஒருகுன்றின் உச்சிக்கு அழைத்துச் செல்கிருர். அங்கிருந்து 'அதோபார்' என்ருெரு காட்சியை நமக்குக் காட்டுகிருர். அங்கே யானைப் போர் ஒன்று நடைபெறுகிறது. குன்றின் மீது இருக்கிருேம் என்ற நினைவு நம் அச்சத்தைத் தவிர்க்கிறது. எவ்வாறு குன்றேறிக் காண்பதால் அச்சம் இன்றி, நன்கு யானைப் போரைக் காண முடிகின்றதோ, அது போல தன் கையிலிருக்கும் பொருளினுல் செயல் செய்பவனுடைய செயல் இருக்கின்றது என்று (குறள் 758) தெளிவு படுத்துகிருர்.

படைச் செருக்கு என்னும் அதிகாரத்திலும், யானைபிழைத்தவேல் ஏந்தல் (குறள் 772) இனிது என்பதை அழகுபட உணர்த்துகிருர். கைவேலைக் களிற்ருெடு போக்கி, மெய் வேலைப் பறித்து மகிழ்பவனை (குறள் 774) நமக்குக் காட்டும் போதும் நம் வீரம் பொங்குகின்றது.

தலை மகளது அழகு, தலைமகனை வருத்தும் நிலைகூறவந்த வள்ளுவருக்குக் களிற்றின் நினைவு வருகின்றது. தலைமகளின் சாயாத மார்பகத்தின் மேல் இட்ட துகிலும், யானையின் மேல் இட்ட முக மறைப்பும் ஒக்க வந்து நிற்கின்றன (குறள் 1087) ஒண்டொடியாள் அழகு கூறவந்த போதும் இவ்வழகிய ஒப்புமை வள்ளுவரின் முன் வந்து நிற்கின்றது.

குருடர்கள் கண்ட யானையைப் போல அல்லாது குறளிலே வரும் யானை, பல்வகையானும் சிறப்புறுகின்றது. அது வள்ளுவர் கைவண்ணம். கடுகினுட் புகுந்தாலும் அக்களிற்றின் சிறப்பே சிறப்பு.

வெண்பாப் போட்டி 14.

★

ஈற்றடி

பச்சைத் தமிழரின் பண்பு.

இறுதி நாள் 25-2-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

மஞ்சு விரட்டு

இராம. கண்ணப்பன்

ராக்கி, புண்ணாக்கையும் தவிட்டையும் ஆத்திரத்தோடு தொட்டியில் கொட்டிக் கலக்கிவிட்டுத் திரும்பினாள். வேப்பமரத்தில் கட்டிக் கிடந்த செவலைக்காளை, வாலையும் தலையையும் ஆட்டியபடி எழுந்து நின்றது. ராக்கி தன்னை அவிழ்த்துவிடமாட்டாளா என்ற ஏக்கம் அதற்கு; அவளோ, ஆவலோடு எழுந்து நின்ற செவலைக் காளையை வெறுப்போடு பார்த்து "சனியன் நீ எப்பத் தொலைவியோ அப்பத்தான் எனக்கு நல்ல காலம் பொறக்கும்!" என்று ஏசியபடி வீட்டிற்குள் நுழைந்தாள். செவலைக் காளைக்கு ராக்கி பேசியது புரிந்ததோ என்னவோ பரிதாபமாக அவளைப் பார்த்துவிட்டு கீழே படுத்து அசை போடத் தொடங்கியது. காளியப்பனிருந்திருந்தால் அதை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்றிருப்பான்; இல்லாவிட்டால் மூன்று நான்கு தரமாவது தண்ணீர் காட்டி வைக்கோல் அள்ளிப் போட்டிருப்பான்.

ராக்கியின் அண்ணன் காளியப்பனுக்குச் செவலைக்காளையின் மேல் அளவு கடந்த அன்பு. நயினார்பட்டி செவலைக்காளை என்றால் அந்த வட்டாரத்திலுள்ள மாடு பிடிகாரர்களுக்குச் சிம்ம சொப்பனம். இதுவரை இருபது மஞ்சுவிரட்டுகளில் அது ஓடியிருக்கிறது, ஆனால் அதை யாருமே பிடித்ததில்லை. அப்படி யாராவது துணிந்தால் அவர்கள் உயிரோடு வீட்டிற்குத் திரும்பமாட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சிறுவயல் மஞ்சு விரட்டில் தன்னைப் பிடிக்கத் துணிந்த ஆறு பேர்களை குத்திவிட்டு கம்பீர நடை போட்டு வீட்டுக்கு வந்தது அது. அது முதல் மஞ்சுவிரட்டில் செவலைக்காளை வருகிறதென்றால் பெரிய பெரிய மாடு பிடிகாரர்களெல்லாம் பயந்து ஓடுவார்கள். கொழுத்த மேனியும், சிவப்பு நிறமும், பின்னோக்கி வளைந்த உயர்ந்த திமிலும், கூராக நீண்டு வளர்ந்து, சற்றே முன்னே வளைந்த கொம்பும், ஐந்தடி உயரமும் உள்ள செவலைக்காளையின் தோற்றமே காண்பவர்களை கதிகலங்கச் செய்யும். காளியப்பனையும், ராக்கியையும் தவிர வேறு யாருமே அதன் கிட்டே நெருங்க மாட்டார்கள்,

ராக்கிக்குச் செவலைக்காளையைக் காணும்போதெல்லாம் நஞ்சைத் தின்றதைப் போலிருக்கும்; அந்தக்காளையின் மேல் அத்தனை வெறுப்பு ராக்கிக்கு. காரணமில்லாமலில்லை அந்தச்செவலைக் காளையினால்தானே அவள் தன் ஆசை மச்சான் மாமுண்டியோடு வாழ முடியவில்லை. தன் வாழ்க்கைக்கே முட்டுக் கட்டை அந்தக் காளைதான். என்று அதன்மேல் குரோதமும் வெறுப்பும் கொண்டிருந்தாள் ராக்கி.

செவலைக்காளை, சோர்ந்து போய்ப் படுத்துக் கிடந்தது.

அடுத்த பட்டிக்குச் சென்றிருந்த காளியப்பன், மாமுண்டியோடு திரும்பி வந்தான். காளியப்பன் தூரத்தில் வரும்போதே அவனைக் கண்ட அவனின் அன்புக் காளை ஆவலோடு எழுந்து நின்றது. காளியப்பன் காளையைக் கண்டு திடுக்கிட்டான். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ராக்கி என்று குரல் கொடுத்துவிட்டு, கட்டிக் கிடந்த காளையை அவிழ்த்தான். காளை அவன் தோளை நாவினால் நக்கிக் கொடுத்தது. அவன் கோபமெல்லாம் பறந்துவிட்டது.

"என்னண்ணே ..!" என்றபடி கையில் அகப்பையோடு வெளியே வந்தாள் ராக்கி. வெளியே அவளின் ஆசை மச்சான் மாமுண்டி நிற்பதைக் கண்டதும் அவள் ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றாள். அவளைப் பார்த்து மாமுண்டி சிரித்தான். வைரம் பாய்ந்த கருவேல மரத்தின் நிறத்தைப் போன்ற ராக்கியின் முகத்தில், வெற்றிலைக் காவி படிந்து மினுமினுத்த உதடுகள் ஒரு முறை விரிந்து சுருங்கியது. எதிர்பாராத விதமாக மாமுண்டியைக் கண்ட திகைப்பாலும் ஆனந்தத்தாலும், மாமுண்டியை வரவேற்கக் கூட மறந்து நின்றாள் அவள்.

"என்ன புள்ளே...?" என்று மௌனத்தைக் கலைத்தான் மாமுண்டி. அவனது கண்கள் ராக்கியின் அங்க அமைப்புகளை மேய்ந்துகொண்டிருந்தன. மாமுண்டி தன்னையே சிறிதும் கூச்சமின்றிப் பார்ப்பதை உணர்ந்த ராக்கி, நாணம் மேலிட உள்ளே ஓடிவிட்டாள். மாமுண்டி மெல்ல நகைத்தபடி திண்ணையில் அமர்ந்தான்.

தொட்டித் தண்ணீரை மட்டையால் கலக்கியபடி மாமுண்டியும் ராக்கியும் நின்ற நிலையைக் கவனித்த காளியப்பன், 'தங்கச்சிக்குப் பொருத்தமானவன்தான் மாமுண்டி' என மனதுக்குள்ளே எண்ணிச் சிரித்துக்கொண்டான். காளை தொட்டித் தண்ணீரைக் காலி செய்துவிட்டு அடியில் உறைந்து கிடந்த தவிட்டையும் புண்ணாக்கையும் நாக்கால் துளாவியது. காளியப்பன் காளையை வேப்பமரத்தில் கட்டி வைக்கோல் அள்ளிப் போட்டுவிட்டு மாமுண்டியின் எதிரில் வந்தமர்ந்தான். இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். ஒன்றும் புரியாமல் சிரித்துக்கொண்டனர். அண்ணனும், மச்சானும் என்ன பேசப் போகிறார்கள் என்பதைக் கேட்க ராக்கி குதிருக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு இடுக்கு வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மெல்லப் பேச்சை ஆரம்பித்தான் மாமுண்டி.

"வருகிற சித்திரையிலாவது கலியாணத்தை முடிச்சுபுடனும் மச்சான்!"

"ஆமா மச்சான், நானும் அதைப் பத்தித்தான் யோசிச்சுக்கிட்டிருக்கேன். பட்டமங்கலம் மஞ்சுவிரட்டிலே நம்ம செவலைக்காளையை எவன் புடிக்கப் போறானோ தெரியல்லே?" என்றான் காளியப்பன், மாமுண்டியைப் பார்த்தபடி. காளியப்பனின் பேச்சு, மாமுண்டிக்கு என்னவோ போலிருந்தது.

"என்ன மச்சான் அப்படிச் சொல்லிப்புட்டே! ராக்கி எனக்குத்தானே சொந்தம்; நீ என்னென்னமோ சொல்லுறியே மாமுண்டியின் குரல் சோர்ந்து ஒலித்தது.

"ராக்கி உனக்குத்தான் மச்சான். ஆனா செவலைக்காளையை நீ புடிச்சி அடக்கணுமே! வர்ர கிழமை பட்டமங்கல மஞ்சுவிரட்டில புடி; சித்திரையிலே கலியாணத்தை வச்சுக்குவோம்...!"

"உம்மாடு என்ன அவளவு பெரிசா? என்னமோ பெரிசாச் சொல்லுறியே, கன்னுக்குட்டி மாதிரி இருக்கு! பட்டமங்கலம் மஞ்சுவிரட்டில இதைப் புடிக்காட்டி ஒரு பக்கத்து மீசையை எடுத்துப்புடுறேன் மச்சான்" மாமுண்டி விளையாட்டாகச் சிரித்துக்கொண்டே சொன்னான். அவன் பேச்சு காளியப்பன் மனதில் சுருக்கென்று பட்டது. செவலைக்காளையைப்பற்றி யார் மட்டமாகப் பேசினாலும் சரி, காளியப்பனுக்குப் பிடிக்காது.

"மாமுண்டி மச்சான், நீ வாயினாலே சொல்லிப்புட்டே, செவலைக்காளையைப் புடிக்க ஆனானப்பட்டவனுகளெல்லாம் தானானப் போட்டிருக்கானுக! செவலையைப் புடிக்கிறது லேசான காரியமில்லை ஆமா!"

"அதைப் பட்டமங்கலம் மஞ்சுவிரட்டில பார்த்துப்புடுவோமே! என்னமோ செவலைக்காளையைப்பத்திப் பெரிசாப் பேசறியே மச்சான்...!" மாமுண்டி சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுக் குதிருக்குப் பின்னால் ஒளிந்து நின்ற ராக்கியைப் பார்த்தான். அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

மாமுண்டியின் பேச்சு அவளுக்கு அச்சத்தைத் தந்தது. 'யாருக்கும் அடங்காத செவலைக்காளையை மச்சான் பிடிப்பதா? பொல்லாததாயிற்றே அது; குத்திக் கீழே போட்டுக் குடலைப் பிடுங்கிவிடுமே? இந்த மச்சானுக்கு ஏன் இப்படிப் புத்தி போச்சு?' ராக்கி மனதுக்குள்ளே இப்படி எண்ணி வேதனைப்பட்டாள்.

"சரி மச்சான் பொழுது போச்சு' நான் போறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து நின்றான் மாமுண்டி! அதுவரை செவலைக்காளையைப்பற்றி மாமுண்டி பேசியதை நினைத்துக்கொண்டிருந்த காளியப்பன் அவன் பேச்சைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

"என்ன மச்சான் அதுக்குள்ளே பொறப்புட்டுட்டே ராவைக்குச் சாப்பிட்டுட்டு, காத்தாலே போகலாம் மச்சான்!"

"இல்லே மச்சான்; வெதப்புக்குத் தண்ணீ எறைக்கணும்; நான் போறேன்; இன்னொரு நாளைக்குச் சாப்பிடுறேன்!"

மாமுண்டி பிடிவாதமாகப் புறப்பட்டுவிட்டான். வேப்பமரத்தடியில் கட்டிக் கிடந்த செவலைக்காளை அவன் போவதைப் பார்த்துப் பயங்கரமாகச் சீறியது. இதைப் பார்த்த மாமுண்டி பின்னால் வந்த காளியப்பனைப் பார்த்தான். காளியப்பன் மாமுண்டியைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பு மாமுண்டியைக் கேலி செய்வதைப் போலிருந்தது.

"இரு இரு, பட்டமங்கலம் மஞ்சுவிரட்டில உன் திமிறை அடக்குறேன்" என்று சொல்லிவிட்டு நீண்டு கிடந்த ஒற்றையடிப் பாதையில் வேகமாக நடந்தான் மாமுண்டி. செவலைக் காளையை எப்படியாவது பிடிக்க வேண்டும்; சித்திரை மாதத்தில் ராக்கியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்திலேயே வீட்டுக்கு வந்து சேர்ந்தான் மாமுண்டி.

காளியப்பனின் ஊரான நயினார்பட்டிக்கும் மாமுண்டியின் ஊரான ஒத்தைப்பட்டிக்கும் அதிக தூரமில்லை. பாக்கை வாயில் போட்டு. வெற்றிலையை நார்கிழித்துச் சுண்ணாம்பு தடவிப் போட்டுக்கொள்ளும் நேரத்தில் நயினார்பட்டியிலிருந்து ஒத்தைப்பட்டிக்குப் போய்விடலாம். இடையே ஒரு வயல் கடப்புத்தான்.

ராக்கிக்கு மாமுண்டியின் மேல் கொள்ளை ஆசை. மாமுண்டியைப் பார்க்க வேண்டுமென்று அவள் நினைத்தால் போதும்; குப்பைக் கூடையில் குப்பையை நிரப்பித் தலையில் தூக்கிக்கொண்டு வயலுக்குக் கிளம்பி விடுவாள். அங்கே மாமுண்டியைக் கண்டு ஆசை தீரப் பேசிவிட்டு வருவாள்.

காளியப்பனுக்கும், ராக்கியை மாமுண்டிக்குக் கட்டிக் கொடுக்க வேணும் என்ற ஆசைதான். ஆனால் மாமுண்டி செவலைக்காளையைப் பிடிக்க வேணுமே! இல்லாவிட்டால்... ராக்கி மாமுண்டிக்குக் கிடைக்கமாட்டாளா...?

★

அமுது வடிந்துகொண்டிருந்த இருள் மேகத்தை விலக்கிக்கொண்டு வந்த அழகு நிலா, அமுது பொழிந்துகொண்டிருந்தது வானத்தில்.

செவலைக்காளைக்குத் தண்ணீர் காண்பித்து வைக்கோல் அள்ளிப் போட்டுவிட்டு தெருத் திண்ணையில் ஈச்சம்பாயை விரித்துப் படுத்துக் கொண்டான் காளியப்பன். மறு திண்ணையில் அதே நிலையில் வந்து படுத்தாள் ராக்கி. காளியப்பன் படுத்தவுடன் கண்ணை மூடினான்: நித்திரை அவனை வாரிச் சுருட்டிக்கொண்டது. ஆனால் ராக்கிக்கோ தூக்கம் வரவில்லை. கண்ணை மூடினாலும் திறந்தாலும் மாமுண்டியின் உருவம் அவள் கண் முன்னே தோன்றியது. ஈச்சம் பாயில் புரண்டு புரண்டு பார்த்தாள்; கண்கள் மூட மறுத்தன. கண் முன்னே தோன்றிய மாமுண்டியின் உருவம் அவளை அலைக்கழித்துக்மொண்டிருந்தது. 'மச்சான் எப்ப மச்சான் என்னைக் கட்டிக்கிட்டுப் போகப்போறே!" மெதுவாக வாய்விட்டுச் சொன்னபடி திரும்பிப் படுத்தாள். செவலைக்காளை அவள் கண்ணில் பட்டது. "சனியனே, உன்னால் தானே எனக்கு இந்த வேதனை!" மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கண்ணை மூடினாள்.

நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன. மஞ்சுவிரட்டு நாள் நெருங்க நெருங்க ராக்கியின் மனதில் பீதி அதிகமாயிற்று. "செவலைக்காளை திடீரென்று செத்துவிடாதா! அண்ணனின் மனசுதான் மாறிவிடாதா?" என்று நினைத்து நினைத்து வேதனைப்பட்டாள். அவள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை.

நாளைக்கு மஞ்சுவிரட்டு, ராக்கிக்குப் பயம் அதிகமாயிற்று! எப்படியாவது செவலைக்காளையைப் பிடிக்க வேண்டாமின்னு மச்சாங்கிட்டச் சொல்லணும் என்ற எண்ணத்தோடு, ராக்கி வயலுக்குப் புறப்பட்டாள்.

ஆடு மாடுகள் மேய்வதைப் பார்த்தபடி வரப்பில் அமர்ந்திருந்தான் மாமுண்டி. வேகமாக நடந்து வந்த ராக்கி அவனுக்குப் பக்கத்தில் வந்து "மச்சான்!" என்று கலக்கத்தோடு அமர்ந்தாள். எதிர்பாராத நேரத்தில் ராக்கி வந்ததைக் கண்டு மாமுண்டி திகைத்துவிட்டான்.

"என்ன புள்ள ராக்கி இந்தநேரத்தில...!"

"பாக்கனும்மினு தோனுச்சு மச்சான்; வந்தேன்!' ராக்கி தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்.

நடுவானில் நின்ற ஆதவன் மண் மாதாவை வெப்பக் கதிர்களால் சுட்

(8-ம் பக்கம் பார்க்க)

தரவேண்டிய தியாகங்களைத் தாருங்கள்

வேற்றுமைகளை - தள்ளிவிட்டுப் பணிபுரிய வாருங்கள்.

[6-2-61-ல் சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், ஒரு தனித்தன்மைவாய்ந்ததாக அமைந்திருந்திருக்கிறது இந்தக் கூட்டம். இந்தக் கூட்டத்தை நமது கழக நண்பர்களை விட மாற்றுக்கட்சிக்காரர்கள் அதிக ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அந்த அளவுக்கு இந்தக் கூட்டம் நமது கழகத்திற்கு ஒரு பெரிய இலாபம்தான்.

வேலூரில் நிகழ்ந்துவிட்ட சில வேதனையான காரியங்களுக்குப் பிறகு, ஒரு புதிய பொலிவு நமது கழகத்திற்கு ஏற்பட்டிருப்பதோடு, இயக்க நண்பர்களும் சில புதிய தெளிவுகளைப் பெற்றிருக்கின்றனர். நான்மேடைக்கு வந்தவுடனேயே ஒரு நண்பர், ஒரு கேள்விச்சீட்டை என்னிடம் தந்திருக்கிருர். அவர் இந்த மேடையின் முகப்பில் "சம்பத் வாழ்க" என்று போட்டிருக்கிறதே, "திராவிடம் வாழ்க" என்று இருக்கக்கூடாதா? என்று கேட்டிருக்கிருர்.

அந்த அளவுக்கு—தனி நபருக்கு வாழ்த்துச் சொல்லுவது அவசியந்தாஞ என்ற அளவுக்கு அவருக்குத் தெளிவு பிறந்திருக்கிறது. நானும் அதையே விரும்புகிறேன். இத்தகைய தெளிவு எல்லோருக்கும் ஏற்படுமாஞல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, அண்மையில் ஏற்பட்டு மறைந்ததைப் போன்ற கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் நல்லது என்றே நான் கருதுகிறேன்.

"சம்பத் வாழ்க" என்று முகப்பில் இந்தக்கூட்டத்தைஏற்பாடு செய்த தோழர்கள் அமைத்ததற்காக நான் வருந்துகிறேன். ஒன்று என் மேலுள்ள அன்பின் மிகுதியால் அவர்கள் செய்திருக்க வேண்டும்; அல்லது நான் வாழ்வதற்கு ஆபத்து ஏதேனும் வந்துவிட்டதோ என்று அச்சப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய எந்த ஆபத்தும் எனக்கு வராது என்று நண்பர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

இனிமேலாவது, இதுபோன்று தனிப்பட்ட தலைவர்களை வாழச் சொல்வதைத் தவிர்த்து, நமது இலட்சியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொண்டாற்ற அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணதாசனுக்கு இங்கே ஒரு தோழர் 'மெடல்' ஒன்றை அளித்தார். அது எதற்காக? அவர் என்ன இருபது மணிநேரம் இடைவிடாது சைக்கிள் விட்டாரா? அல்லது 70 மணிநேரம் நிற்காது பேசிவிட்டாரா?

இத்தகைய நடவடிக்கைகளை நான் கண்டிக்கிறேன். இப்போது நமது கடமை மிகவும் பெரியது. எத்தகைய வேடிக்கை விளையாட்டுக்களுக்கும் நாம் அடிமையாகிவிடக் கூடாது. நாம் அவைகளுக்கு அடிமைப்பட்டால், நமது இலட்சியத்திற்கே இறுதியில் ஆபத்து வந்துவிடும்.

வேலூரில் நிகழ்ந்த சில சிறு கருத்து வேறுபாடுகளுக்குப் பிறகும், அது சுமுகமாகத் தீர்ந்த பின்னும், சில எதிர்க்கட்சிக்காரர்கள் "அண்ணுவை ஒழிக்க சம்பத் முயல்கிருன்" என்றும் "சம்பத்தைத் தீர்த்துக்கட்ட அண்ணு கத்தியைத் தீட்டுகிருர்" என்றும்-பேசியும் எழுதியும் வருகின்றனர்.

அண்ணு அவர்களுக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு எத்தகையது என்பதை அவர்கள் அறியாதவர்கள். அண்ணு ஒரு பெரிய அரசியல் தலைவர் என்பதால் நான் அவருடன் உறவு கொள்ளவில்லை. அவர் எழுச்சிமிக்க புரட்சிக் கருத்துக்களைத் தந்த எழுத்தாளர் என்பதற்காகவும் நான் அவருடன் உறவு கொள்ளவில்லை; அவரை யாரோ ஒருவர் "தென்னுட்டின் பெர்னுட்ஷா" என்று சொன்னதினுலேயே சொக்கிப் போய் அவரின் உறவைப் பலப்படுத்திக் கொள்ளவில்லை.

நான் அவரிடத்தில் கொண்டுள்ள அன்பு, எனக்கு அரசியல் தெரியாத காலத்திலேயே ஏற்பட்டது. எங்கள் வீட்டில் அவர் தங்கியிருந்தபோது அது பலப்பட்டு, இன்று எந்த ஒரு சக்தியாலும் அழிக்க முடியாதபடி அது வளர்ந்திருக்கிறது.

எங்களுக்கிடையே இன்று கருத்து வேறுபாடு என்ருல், அது பொதுக் கடமைக்கு நாங்கள் இருவரும் செலுத்துகின்ற விசுவாசமாகும். நாங்கள் இருவருமே இன்றையத் தினம் என்னுடைய குடும்பத்தாருக்கெல்லாம் விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிருேம்.

திராவிடர் கழகத்திலிருந்து நாங்கள் யெளியேறியபோது, பெரியார் அவர்கள் என்னை மிகக் கேவலமாகத் திட்டிக் கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். நான் அதை எதிர்த்து அவர் மீதே வழக்குப் போட்டேன்.

என்னைச் சார்ந்தவர்களெல்லாம் அந்தச் செயலை எதிர்த்தார்கள். அரசியலிலே சம்பந்தமில்லாத எனது குடும்பப் பெரியவர்கள்என்னிடம்வந்து"வெங்கட்டசாமி நாயுடுவின் குடும்பத்திற்கு நீ சேர்த்து வைக்கும் புகழ் இதுதாஞ?" என்று கெஞ்சினுர்கள்.

நாஞே 'வெங்கட்டசாமியின் குடும்பம் வெங்கட்டசாமி நாயுடு சத்திரத்தோடு முடிந்தது. தமிழகத்தின் முச்சந்திக்கு வந்துவிட்டால், நான் வேறு; அவர் வேறு" என்று கூறி என் கொள்கையில் உறுதியோடிருந்தேன்.

இத்தனைக்கும் பிறகு-எங்கள் இருவருக்கு மிடையே தாண்ட முடியாதஅரசியல் பள்ளம் இருந்தும் நான் அவரைச் சந்திக்கிற போது "அப்பா" என்றுதான் அழைக்கிறேன். இது தவறல்ல; இதுதான் தமிழ்ப்பண்பு.

அவரும் டெல்லிக்கு வருகிற போது மகனுடைய வீட்டில் உரிமையோடு வந்து தங்குகிருர்; அதுவும் தமிழ்ப்பண்பே.

இதை உணராது, இத்தகைய செயல்களுக்கு எவரேனும் தவருன கருத்துக்களை கொள்வார்களேயாஞல், அவர்கள் தான் தமிப்பண்பைக் கொன்றவர்கள்.

'விடுதலை' 'விடுதலை' என்று முழங்கிக் கொண்டிருப்பதனுல் மட்டுமே யாரும் விடுதலையை வழங்கிவிடமாட்டார்கள். அல்லது அதை யாசித்தும் பெற முடியாது. அதற்குத் தர வேண்டிய விலையை நாம் தந்துதான் தீர வேண்டும். நானும் அண்ணுவும் உங்களைப் பார்த்துக் கண்களைத் தாருங்கள், கரங்களைத் தாருங்கள் என்று உரிமையுடன் கேட்டோம்.

பலர், கண்களையும் கைகளையும் மட்டுமல்ல-உயிரையுமே தந்தார்கள்.

இரண்டு தினங்களுக்கு முன்னர், கோவைக் கூட்டமொன்றை முடித்துக்கொண்டு நண்பர்களுடன் நான் உரையாடிக் கொண்டிருந்தபோது, ஒருவர் என்னிடம் கடிதமொன்றைக் கொண்டு வந்தார்.

1946-ம் ஆண்டு அம்மாப்பேட்டையில் நான் ஒரு திராவிடக் கழக ஊர்வலத்தில் கலந்துகொண்டபோது நடந்த நிகழ்ச்சியை அதில் அவர் நினைவுபடுத்தியிருந்தார். ஊர்வலம் "கதர்க்கொடி பீடி" என்ற பீடிக் கம்பெனி வைத்திருந்த ஒருவனின் கடைப்பக்கம் வந்தபோது ஒருவன் கடையிலிருந்து சோடா புட்டி ஒன்றை எடுத்து என்மீது வீசிஞன்; அப்போது மேற்கண்ட தோழர் குறுக்கே பாய்ந்து அதைத் தடுத்தார். அதனுல் அவரது ஒற்றைக்கண் போய்விட்டது. அதை நினைத்தபோது என்னையறியாமலேயே நான் அழுதுவிட்டேன். அவர் ஏன் இத்தகைய தியாகத்தைச்செய்து கண்ணைக் கொடுத்து என்னைக் காப்பாற்றினுர்?

நாங்கள் எல்லாம் செல்லப் பிள்ளைகளாக வளரவேண்டும் என்ற காரணத்தால் அல்ல. நாங்கள் ஏதேனும் நல்ல காரியங்களை நாட்டிற்குச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்.

உடையார்பாளையம் வேலாயுதம் உயிரைக் கொடுத்தார் என்ருல், அவர் என்ன இளித்த வாயரா? அல்லது வாழ்வைச் சுருக்கிக் கொண்டவர்களெல்லாம் ஏமாந்தவர்களா? இல்லை. நமக்குப் பின்னுல் வருகிறவர்களும் அவர்களுடைய உயிரையும் சேவா உணர்ச்சியுடன் நாட்டுக்கு அர்ப்பணித்து விடுவார்கள் என்ற நல்லெண்ணத்தோடுதான் அவர்கள் உயிரை விட்டார்.

நாம் அதைப்போல நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிருேமா? சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இந்தக் கூட்டம் முடிந்ததும் வீட்டிற்குச் செல்கின்ற நீங்கள், படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள். வெட்கிப் போவீர்கள். நாம் இன்னும் நம்மைச் சரியாக அர்ப்பணிக்கவில்லையே என்ற பதில்தான் வேதனையோடு கிடைக்கும்.

தி. மு. கழகம் அழிந்துவிடும் என்றுபலர்சொன்னுர்கள்; வந்து போன சிறு குழப்பங்கள் நமது வளர்ச்சிக்கு ஒரு பரீட்சையாகும் நாம் நல்ல முறையில் சமாளித்தோம். இன்று தோழமை உணர்ச்சி மிளிரக் கைகோர்த்துப் பணியாற்றப் புறப்பட்டு விட்டோம்,

இயக்கத்திலிருந்து யாரும் என்றும் வெளியேற மாட்டார்கள். வெளியேற்றவும் முடியாது. அப்படி யாராவது எதிர்பார்த்தால் பயங்கரமான ஏமாற்றத்தைத்தான் அடைவார்கள்.

சம்பத்தை இருக்கக்கூடாது என்று சொல்ல கருணுநிதியால் முடியாது. கருணுநிதியைவிரட்ட நெடுஞ்செழியனுல் ஆகாது. நாம் அத்தனைபேரும்தியாகிகள்; நம்முடைய தியாகங்கள் மேலும் மேலும் நாட்டுக்குத் தேவை.

கருணுநிதி மிகப் பெரிய தியாகங்களைச் செய்திருக்கிருர். நாவலர் நெடுஞ்செழியனின் தியாகத்தை மறந்துவிடுவதற்கில்லை. அதைப்போலவே, அன்பழகன், நடராசன், சிற்றரசு, கண்ணதாசன் முதலியோரும் மகத்தான தியாக வரலாற்றைப் படைத்திருக்கிருர்கள்.

நண்பர் ஆசைத்தம்பி, தன்னுடைய கடந்த காலத்தியாகங்களை எடுத்துச் சொல்லி வரவு செலவுக் கணக்கைப் படித்தார். இப்படி "தான் யார்" என உங்களிடையே நாங்கள் எடுத்துச் சொல்லும் நிலை ஏற்பட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். எங்களை நாங்களே உரைகல்லில் உரசிக் காட்டவேண்டியது வேண்டாத நிலைதான். ஆஞலும் அதற்காக நாங்கள் அஞ்சவில்லை. அதற்கு அஞ்சுபவர்கள் சிலர் இருக்கலாம். அவர்கள் தான் யார் என்பதைத் தைரியமாக எடுத்துச் சொல்லமுடியாதவர்கள்.

கண்ணதாசன் அறிவிப்பு

இந்தத் திங்கள் 16 ம் நாளில் முசிரி மாவட்டத்திற்கும்; 17, 18, 19 ம் நாட்களில் சேலம் மாவட்டத்திற்கும் 20 ம் நாளில் வடஆற்காடு திருப்பத்தூருக்கும், 21 ம் நாளில் ஒடுக்கத்தூருக்கும் கூட்டங்களுக்கு வருவதாக ஒப்பியிருந்தேன். சில சூழ்நிலைகள் காரணமாக இந்த நாட்களில் சென்னையிலேயே தங்கவேண்டியிருப்பதால் கீழ்க் கண்டபடி நாட்களை மாற்றியமைத்து எழுதியிருக்கிறேன். மேற்குறித்த பகுதிகளிலுள்ள தோழர்கள், தயவுசெய்து இந்த முறையில் கூட்டங்களை அமைத்துக்கொள்ளக் கோருகிறேன்.

மார்ச் 9	முசிரி வட்டம்
,, 10	சேலம் மாவட்டம்
,, 11	சேலம் மாவட்டம்
,, 12	சேலம் மாவட்டம்
,, 13	திருப்பத்தூர் (வ. ஆ.)
,, 14	ஒடுக்கத்தூர்

இதன்றியும், நான் சென்னையைவிட்டு வெகுதூரத்திற்கு அடிக்கடிச் செல்லமுடியாதிருப்பதால், நண்பர்கள் தயவுசெய்து சில மாதங்களுக்குக் கூட்டங்களுக்கு எழுத வேண்டாம்.

★ ★ ★

காரைக்குடி நகரிலிருந்தும், இராமநாதபுரம் பிற பகுதிகளிலிருந்தும் பல தோழர்கள், கழகத்தில் எனது உறுப்பினர் நிலைபற்றிக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் தயவுசெய்து எனக்காக எதுவும் செய்யவேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அனைவருக்கும் தனித்தனியே பதிலெழுத முடியாமல் இருப்பதற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

அன்பன்

கண்ணதாசன்

தென்றல்

ஏப்ரல் 15-ந் தேதி இதழ்

ரா. பி. சேதுப்பிள்ளையின்

வெள்ளிவிழா மலராக வெளிவரும்

விலை 25 காசுகள்.

விபரங்கள் பின்னர்.

ஆகவேதான் எங்களில் யாரும் வெளியே போகமாட்டோம். அப்படிப் போக வேண்டுமென யாராவது பேசினால்-நினைத்தால் அவர்கள் விபரம் தெரிந்தவர்கள் அல்ல; எங்கேயோஇருந்து வந்து இயக்கத்தில் ஒட்டியவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கைக்குப் பிறகு, நாம் அனைவரும் எல்லா வேற்றுமை உணர்ச்சிகளையும் உதறித் தள்ளிவிட்டுப் பணிபுரிய வந்திருக்கிறோம்.

அண்ணா அவர்கள் தம் அறிக்கையில் வேலூர் நிகழ்ச்சிபற்றி, தனிப்பட்ட முறையில் யாரையும் கண்டித்து எழுதவில்லை.

அத்தகைய மனப்பான்மை இனி ஏற்படக்கூடாது என்றுதான் வேண்டியிருக்கிறார். ஆகவே யாரும் எவரையும் குறிப்பிடுவதாகக் கற்பனைசெய்துகொள்ளக் கூடாது.

நம்முடைய இலட்சியத்திற்கு நாம் புதுத் தெம்புடன் போராடி வெற்றி அடைய இது ஏற்றதொரு சூழ்நிலையாகும்.

பண்டிதரின் ஏகஇந்தியத் தத்துவம் குலைந்துவருகிற இந்த நேரத்தில் நாம் தீவிரமாக-துரிதமாக நம் இலட்சியத்திற்குப் போராடினால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

★

தத்துவச் சிந்தனையாளர் பத்துப்பேர் கூடின் தகராறுகள் வருவது இயற்கையே.

[6-2-61-ல் சென்னைக் கூட்டத்தில் கண்ணதாசன் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

இங்கு, எனக்குமுன் பேசிய நண்பர்கள், நகர சபை உறுப்பினர் சிட்டிபாபு தாக்கப்பட்டதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள், இப்படிப்பட்ட செயலை நேற்றையத் தினம் மட்டும் செய்யவில்லை; தொடர்ந்து பலமுறை செய்து பழக்கப்பட்டவர்களதான்!

'சிரங்கு பிடித்தவன் கையும், இரும்பு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது' என்று ஒரு பழமொழி உண்டு; அதைப்போல், காங்கிரசு சொறி பிடித்தவன் கை-சும்மாயிருக்காது! செய்வதையும் செய்துவிட்டு அவர்கள் தாங்கள் தாக்கப்பட்டதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள்.

நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது, 'அவர்கள் சமீபத்தில் தான் அடித்துக்கொண்டார்கள்; அவர்களுக்குள் அடித்துக்கொண்டு முடிந்து, நம்மிடம் காட்டுகிறார்கள்; அவர்கள் தங்களுக்குள் அழிந்துவிடுவார்கள்' என்று, தாக்கியவர் நமது தோழர் என்ற நிலையிலும், அவர் தாக்கப்பட்டதைப் போலவும் பேசியிருக்கிறார்.

மைசூர் சட்டமன்றத்தில், சபாநாயகரைப் பேசவொட்டாமல் தடுத்து, நாற்காலியைத் தூக்கிக் கொண்டு அடித்ததும், முதலமைச்சர் ஜட்டியை சட்டையைப் பிடித்திழுத்து ரகளை செய்தவர்களும் அசல் காங்கிரசுக் காரர்கள்!

இன்றையத்தினம் குடியரசுத் தலைவராக இருக்கின்ற பிரசாத், தலைமையமைச்சர் நேரு ஆகியோர்கூட அடிக்கப்பட்டுள்ளனர். பத்து அறிவுள்ளவர்கள் ஒன்று சேர்ந்தால், அவர்களிடையே, 'காரியமாற்றும வகையில் இப்படிச் செய்யலாமா, அல்லது அதை அப்படிச் செய்யலாமா?' என்ற தத்துவத் தகராறு எழுவது ஒன்றும் ஆச்சரியமில்லை!

ஆனால், மந்திரிப் பதவி உனக்கா அல்லது எனக்கா? என்பதிலேதான் காங்கிரசுக்காரர்களுக்குள் சண்டை! இப்படி மானமற்ற சண்டையை மறந்துவிட்டு, நிதியமைச்சர் மற்றவர்களைப் பார்த்துக் கூறுகிறார்!

"அடிபட்டவன் திருப்பித் தாக்காமல் இருந்தால் அவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று ஒரு பழமொழி இருக்கிறது. தாக்கப்பட்ட எங்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். இப்படிப்பட்ட முறை மற்றவர்களால் முடியாது-மற்றவர்களுக்குப் பழக்கமிருக்காது' என்று கருத வேண்டாம். பத்து ருபாய்க்கு ஆள் பிடித்து அவர்களை ஏவிவிட்டுத் தாக்குவது என்பது அவர்கள் செய்வது! ஆனல், திருப்பித் தாக்குவது என்றால், எங்களிடம் உள்ள ஏராளமான தொண்டர்களுக்கு நீங்கள் ஈடு கொடுக்க முடியாது. இப்படிப் பிறரை அடித்தும், அடிக்க ஏவியும் விட்டுக்கொண்டிருக்கும் இவர்களையா நாம் மீண்டும் சட்டமன்றத்தில் அமர்த்துவது?

அண்ணா அவர்களுக்கும்- சம்பத் அவர்களுக்கும் இடையே எழுந்த கருத்து வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தி நாள்தோறும் விற்பனை செய்து வந்தவர்கள், அண்ணாவும்-சம்பத்தும் தங்கள் தகராறுகளைத் தீர்த்துக் கொண்டவுடன், 'இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிட்டதே-செய்தி, இவ்வளவு தானா?' என்று எண்ணுகிறார்கள்!

இலங்கையிலே 25-இலட்சம் தமிழர்கள் அன்றாடம் செத்துச் செத்துப் பிழைக்கிறார்கள். அவர்களுக்கு நம்மைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

பர்மாவிலே வாழ்வதற்கு நபர் ஒன்றுக்குத் தலைவரியாக ரு. 300 கட்ட வேண்டும். இதைக் கட்டமுடியாமல் சுமார் 30 000பேர் பர்மாச் சிறைச்சாலைகளிலே வாடுகிறார்கள்.

இவர்களெல்லாம் யார்?-தமிழகத்தைச் சார்ந்த நமது தமிழ்த் தோழர்கள்! இவர்களில் பெரும்பாலோர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்.

'பர்மா நாடு' என்ற பத்திரிகையின் ஆசிரியர் டேவிட் என்பவர் சமீபத்தில் நேருவைக் கண்டு, கண்ணீர் விட்டு இதை எடுத்துக் கூறியிருக்கிறார். உலக முழுவதும் தமிழர்கள் அநாதைகளாக வாழ்கிறார்கள்-நடை பிணங்களாக வாழ்கிறார்கள். நாமும் இதைக் கண்டும் பேசாமல் இருக்கிறோம்.

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியிலே இன்றையத்தினம் தகராறு கிடையாது என்று சிலர் பெருமையாகக் கூறிக் கொள்ளலாம். யோவான் சுவிசேஷத்தில் ஒரு வசனம் இருக்கிறது-'நானே மேய்ப்பவன்; என்னைவிட்டு ஆடுகள் செல்லாது'-என்று! மேய்ப்பதற்கு ஒரு ஆளும், பின்னாலே செல்லுவதற்குப் பல ஆடுகளும் இருப்பதும் தான் இன்றைக்கு இருக்கின்ற காங்கிரசு! ஆகவே, மேய்ப்பவனுக்கும்-ஆட்டுக்கும் இடையே தகராறு வராது; மாறாக, மனிதாபிமானமும், தத்துவச் சிந்தனையும் படைத்த பத்துப்பேர் ஒன்றாகக் கூடும்போது தகராறு வரத்தான் செய்யும். இதைப் பெரிதாக எண்ணிக்கொண்டு காங்கிரசுக்காரர்கள் ஏமாற வேண்டாம்.

எங்களுக்கிடையே, நாங்கள் சற்று வேகமாகச் செல்லும்போது, மூச்சு கொஞ்சம் பலமாக வரும். சில நேரங்களில் அந்த சப்தம் பெருமூச்சாகக் கூடக் கேட்கும். ஆக, இவற்றையெல்லாம் கண்டு பயப்படத் தேவையில்லை.

அண்ணாவும், சம்பத்துமாக-இரண்டு பேரும் கொண்டு செல்லுகின்ற பாதையை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் மனமார நிறைவேற்றி வைக்க வேண்டும்.

வாழும்போதும் தி. மு. கழகத்தவனாகவே வாழ்வேன்; செத்தாலும் தி. மு. கழகத்தவனாகவே சாவேன்.

எனக்குச் சுடத் தெரியாது; ஆனால் துப்பாக்கி தூக்க வேண்டும் என்ற ஆசை உண்டு.

நாம், ஆட்சியாளர்களைக் கேள்வி கேட்பதன் மூலம் நம்முடைய இலட்சியத்தை அடைந்துவிட முடியாது.

தட்டிக் கேட்க வேண்டும்-தட்டிக் கேட்டும் தர மறுத்தால், அதட்டிக் கேட்க வேண்டும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டெரித்துக்கொண்டிருந்தான். தாங்க முடியாத- கடுமையான வெயில். மாமுண்டி ராக்கியைக் கூட்டிக் கொண்டு பக்கத்திலிருந்த மர நிழலுக்குப் போனுன். இருவரும் அமர்ந்தனர், ராக்கி பேசாமல் இருந்தாள்.

"என்ன ராக்கி பேசாமே இருக்கியே...?" மாமுண்டி அவளின் தொடையை மெதுவாகத் தட்டிக் கேட்டான்.

"ஒன்னுமில்ல மச்சான்...!"

"பின்னே என்ன புள்ளே...?"

"ஏம் மச்சான், நாளைமஞ்சு விரட்டுல செவலக்காளையைப் புடிக்கப் போறியா...?" அவள் அவனின் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தாள்.

"ஆமா ; அதுக் கென்ன ராக்கி ?"

"வேண்டாம் மச்சான், அந்த நெனைப்ப விட்டுரு மச்சான். எனக் கென்னமோ பயமா இருக்கு ; செவலைக் காளை பொல்லாதது மச்சான்...!"

"போ புள்ளே ! சுத்தப் பைத்தியக் காரியா இருக்கியே...நான் ஆம்புள இல்ல ! பட்டமங்கலம் மஞ்சு விரட்டுல செவலைக் காளையை இந்த ரெண்டு கையாலேயும் புடுச்சு, அது கொம்பை ஒடிக்காட்டி எம்பேரு மாமுண்டி இல்லே புள்ளே நீ பாரு...!" முறுக்கி நின்ற மீசையை, மேலும் முருக்கி விட்டபடி ஆவேசமாகச் சொன்னுன் மாமுண்டி. அவன் பேச்சைக் கேட்டு ராக்கி கலங்கி விட்டாள்.

"நான் சொல்றதக் கேளு மச்சான்...!"

"சும்மா போ புள்ளே ! செவலைக் காளையைப் புடிக்காம விடமாட்டேன்... நீ வீட்டுக்குப் போ !" என்று சொல்லி விட்டு மாமுண்டி எழுந்து வேகமாக நடந்தான். ஒன்றும் புரியாமல் அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் ராக்கி.

இவர்களது பேச்சை எதிர்பாராத விதமாக அங்கு வந்த காளியப்பன் கேட்டுக் கொதிப்படைந்தான். 'மாமுண்டி, செவலைக் காளையைப் புடிக்க நெனைச்சா நீ...நீ தப்ப முடியாது...' மனதிற்குள் நினைத்தபடி அவன் வெறிபிடித்தவன் போல் நடந்தான். சிறிது நேரத்தில் ராக்கியும் புறப்பட்டாள். அவள் நினைவில் செவலைக்காளையின் பயங்கரத்தோற்றம் நிழலாடிக் கொண்டிருந்தது.

எரிந்த பொழுது குளிர்ந்து விட்டது. மாமுண்டியின் பேச்சு காளியப்பனின் நினைவில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. பொழுது குளிரக் குளிர அவன் உள்ளம் எரிமலையாகிக் கொண்டிருந்தது. அரிவாளை எடுத்தான். பூக்கத் தீட்டினுன். செவலைக் காளையின் கொம்பு கூர்மையாகும்வரை செதுக்கினுன். பொழுது முற்றும் குளிர்ந்து இருளைத் தழுவிக் கொண்டது. அவன் உள்ளக் கொதிப்பு அடங்கவில்லை. ராக்கி கொடுத்த கம்பங் கஞ்சியைக் கரைத்துத் குடித்து விட்டு, திருப்பத்தூரை நோக்கி நடந்தான். மறுபடி அவன் வீடு வந்த போது வழக்கமாக விழித்திருக்கும் நெரு நாய்கள் கூடத் தூங்கி விட்டன. மடியிலிருந்த சிறு காகிதப் பொட்டலத்தை எடுத்தான், பிரித்தான். அதிலிருந்த பொடியை உற்றுப் பார்த்தான். நிலவின் ஒளியில் அது மினுமினுத்தது. அவனது கையும் மெய்யும் ஒரு கணம் வெட வெடத்து நின்றன.' என் செவலைக் காளையை எவன் பிடித்தாலும் சாவுதான் அவனுக்குச் சன்மானம்...! மெதுவாக முணுமுணுத்தபடி கையிலிருந்த பொட்டலத்தை சாக்கிரதையாக மடித்துக் கூரையில் சொருகிவிட்டுப் படுத்தான். இதை இருட்டிலிருந்த ராக்கியின் கண்கள் கவனித்துவிட்டன. எப்பொழுது தூங்கினுனே அவனுக்கே தெரியாது.

பட்டமங்கலம் மஞ்சுவிரட்டுத் திடலில் மக்கள் நிறைந்திருந்தனர். காளியப்பன் தன் காளையை முதல் தொழுவத்தில் விட்டிருந்தான். கூட்டத்தைக் கண்டால் துடிப்போடும் மிடுக்கோடும் காட்சியளிக்கும்செவலைக்காளை, அன்று வழக்கத்திற்கு மாருகச்சோர்ந்து

போய் நின்றது. பெரிய பெரிய மாடு பிடிகாரர்களெல்லாம் அதன் உடல் வனப்பைக் கண்டு வியந்த வண்ணம் சூழ்ந்து நின்றனர். கூர்மையாகச் செதுக்கி விட்ட செவலைக் காளையின் நிமிர்ந்து வளைந்த கொம்புகள் வெயிலில் மினுமினுத்தன? நெற்றியில் டந்த நெற்றிப் பிறை கொம்பின் மினுமினுப்பை மேலும் அதிகப் படுத்தியது. சதை பிடித்து உருண்டு திரண்ட அதன் கழுத்தை செவந்திப்பூ மாலையும் சாயத் துண்டும் அலங்கரித்தது. சோர்ந்துபோய் நின்ற செவலைக் காளையின் கழுத்தைத் தடவிக் கொடுத்தபடி நின்ற காளியப்பன் அதன் சோர்வுக்குக் காரணம் புரியாமல் வேதனைப் பட்டான்.

பறைகளும் கொம்புகளும் முழங்கின. நாட்டார்கள் வந்து விட்டார்கள். மாடுகளுக்கெல்லாம் துண்டுகள் கொடுக்கப் பட்டன. செவலைக்காளைக்கு மட்டும் தனியாக இரண்டு துண்டுகள் கொடுக்கப் பட்டது. மாடு பிடிகாரர்களெல்லாம் கும்பல் கும்பலாகத் தங்கள் சகாக்களோடு தயாராக நின்றனர். மாமுண்டியும் தன் சகாக்களோடு செவலைக் காளையை எதிர்பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

தொழுத் திறந்தாயிற்று. இரண்டாவது மாடாக செவலைக் காளையை அவிழ்த்து விட்டான் காளியப்பன். மாடு பிடிகாரர்களெல்லாம் வழி விட்டு ஒதுங்கி நின்றனர். துள்ளி ஓடும் செவலைக் காளை அன்று சோர்ந்து போய் நடந்தது. காளியப்பன் திடுக்கிட்டான். மாடு பிடிகாரர்களுக்கெல்லாம் வியப்பாக இருந்தது. செவலைக் காளைக்கு இன்றுஎன்ன வந்தது ...?

சில குறும்புக்காரர்கள் விசில் அடித்தார்கள். செவலைக்குக் கோபம் வந்து விட்டது. வேகமாக ஓடியது. ஆனுலும் அதன் சோர்வு நீங்கவில்லை. தன் சகாக்களோடு நின்றுகொண்டிருந்த மாமுண்டி செவலையின் மேல் பாய்ந்தான். வாலைப் பிடித்துச் 'சவுள்' போட்டான். செவலை உலுப்பிக்கொண்டு ஓடியது. மாமுண்டியும் தன் பிடியைத் தளர விடவில்லை, கூடியிருந்தவர்கள் உள்ளங்களிலெல்லாம் பீதி குடிகொண்டது. பெரிய மாடு பிடிகாரர்களெல்லாம் "மாமுண்டி உயிரோடு திரும்பினுல் அவனைப் பெற்ற தாயின் தவப்பயன் தான் !" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்.

செவலைக்காளை மாமுண்டியைச் சுமந்துகொண்டு திடலை இரண்டு தரம் சுற்றி வந்து சோர்ந்தது. சமயத்தை எதிர்பார்த்த மாமுண்டி செவலையைப் புரட்டிவிட்டான். அடுத்த கணம் பொத்தென்று விழுந்தது அது. உடன் ஓடி வந்தவர்கள் செவலையை அமுக்கினர். அவர்களை உலும்பிக்கொண்டு எழ முயற்ச்சித்தது செவலைக்காளை; முடியவில்லை. நெற்றிப் பிறையும் சாயத் துண்டுகளும் அவிழ்க்கப்பட்டது. சோர்ந்து போய் எழுந்தது செவலை. அதன் கழுத்து, தாலி இழந்த இளம் பெண்ணின் கழுத்தைப்போல் வெறிச்சென்றிருத்தது. அதன் கால்கள் தள்ளாடின அடுத்த கணம் 'ம்மா' என அலறிக்கொண்டு கீழே விழுந்தது அது. அதன் பிறகு செவலைக்காளை எழுந்திருக்கவே இல்லை. பின்னுல் வந்த காளியப்பனின் இதயம் வெடித்து விடும்போலிருந்தது. அவன் கண்கள் நீரை உகுத்தன. 'அட பாவி' நீ மூட்டி விட்ட நெருப்பு உன்னையே சுட்டுவிட்ட தடா !' என்று அவன் மனம் இடித்துக் காட்டியது.

நண்பர்களிடம் அகப்பட்டுக்கொண்ட மாமுண்டி விழுந்த காளை எழுந்திருக்காததையும், அதன் பக்கத்தில் தனியே நின்ற காளியப்பனையும் கண்டு திடுக்கிட்டான். காளியப்பனை நோக்கி ஓடி வந்தான்.

"மச்சான் !"

ஒரே சமயத்தில் எழுந்த இருவரது குரலும் ஒன்றேடொன்று மோதிச் சிதறின. மாமுண்டியின் மார்பில் முகம் புதைத்து கண்ணீரால் நனைத்தான் காளியப்பன், "நான் செஞ்ச தீவினை என்னையே பாதித் திருச்சு மச்சான்" என்று தேம்பினுன்.

"நான் இப்படி நடக்குமினு நெனைக் கல மச்சான்...! என்னை மன்னிச்சுக்க மச்சான்...!" மாமுண்டியும் தேம்பினுன்.

இருவரும் மாட்டைத் தூக்கி அடக்கம் செய்து விட்டு வீட்டுக்கு வரும் போது நன்ருக இருள் சூழ்ந்து கொண்டது. காளியப்பனுக்கு ஆறுதல் சொல்லி வீட்டில் விட்டபின்னர் தன் வீட்டுக்குப் புறப்பட்டான் மாமுண்டி. ஆனந்தத்தால்பூரித்த ராக்கி மாமுண்டியின் பின்னுல் ஓடி வந்தாள்.

"மச்சான்!"

"என்ன ராக்கி ?"

"ஒன்னுமில்ல மச்சான் !"

"செவலையைப் பிடிக்க முடியாதுன்னியே...பாத்தியா...?" மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு ராக்கியின் கன்னத்தைத் தட்டினுன் மாமுண்டி.

"போ மச்சான்! நான் இல்லாட்டி நீ செவலைக் காளையைப் பொல்லாப் புடிச்சிருவல்ல...! இந்தக் கையாலே நான் தொட்டித் தண்ணியில அண்ணங் கொண்டாந்த வெசத்தைக் கலக்கிக் குடிக்க வைக்காட்டி நீ புடிச்சிருப்பியோ...?" ராக்கி பெருமையோடு சொன்னுள். மாமுண்டியின் முகம் வெளுத்தது- "ராக்கி!" என்று அலறினுன் அவன்.

"நெசந்தான் மச்சான்; இல்லாட்டி ஒன்னுல புடிக்க முடியுமா...?"

"அடி சண்டாளி !" மாமுண்டியின் முரட்டுக் கரம் ராக்கியின் கன்னத்தில் ஆழமாகப் பதிந்தது.

"மச்சான்!" அலறினுள் ராக்கி. அந்த அலறல் அடங்குவதற்குள், மாமுண்டி அந்த இருளில் வெகு தூரம் சென்று விட்டான். ராக்கி திகைத்து நின்ருள்.

★

தமிழ் எழுத்தாளர் சங்கம்

புதிய செயற்குழு அமைப்பு

தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு. அன்பு கணபதி அவர்கள், தமிழ் எழுத்தாளர் சங்கப் பேரவை தமக்கு அளித்த உரிமையின் கீழ், தாம் அமைத்துள்ள செயற்குழு உறுப்பினர்களின் பெயர் விவரத்தைப் பின்வருமாறு அறிவிக்கிருர் :—

துணைத்தலைவர்: திருவாளர் ப. ஜீவானந்தம், அழ. வள்ளியப்பா, அ. பழனிச்சாமி, திருமதி தே. தியாகராசன்; பொதுச்செயலாளர்: பேராசிரியர் மா. இளஞ்செழியன்; துணைச்செயலாளர்கள். திருவாளர்கள் நா. ஜகந்நாதன், ஏ. சி. செல்லப்பன்; பொருளாளர்: திரு. கே. பி. சுந்தரம்; உறுப்பினர்கள்: திருமதிகள் கமலா விருத்தாசலம், சகுந்தலா பாரதி, திருவாளர்கள் டி. கே. சண்முகம், ஸ்ரீஹரி, டி. எஸ். ஸ்ரீபால், அப்துல் வகாப், ரா. பாலகிருஷ்ணன், ந. சஞ்சீவி, ஊ. செயராமன், கோமதி சுவாமிநாதன், கே. ஜி. இராதாமணாளன், வல்லை பாலசுப்பிரமணியம், 'முரசொலி' மாறன், கா. வேழவேந்தன், டி. பி. சித்தலிங்கய்யா.

முற்போக்கு எழுத்தாளரும், இச்சங்கத்தின் துணைத்தலைவர்களில் ஒருவராயிருந்தவருமான திரு. சாமி. சிதம்பரனுரின் மறைவுக்கு இரங்கி வருத்தம் தெரிவித்துத் தலைவரால் கொண்டுவரப் பெற்ற தீர்மானத்தை ஏற்று, எழுந்து நின்று, பேரவை அன்னுருக்கு மரியாதை தெரிவித்தது.

"1961-ம் ஆண்டிற்கான புதிய செயற்குழு அமைத்துக் கொள்ள தலைவருக்கே உரிமை வழங்குவது" என்று திருவண்ணாமலை திரு. ப. தாண்டவராயன் முன்மொழிய, திரு. வெ. வா. திலக் (சாஸ்திரி) வழிமொழிய வந்த தீர்மான்த்தை ஒட்டித் திருவாளர்கள் டி. எஸ். ஸ்ரீபால், மயிலை சீனி. வேங்கடசாமி, புத்தனேரி சுப்பிரமணியம், பேராசிரியர் பி. ஆர். மீனுட்சிசுந்தரம், அழ. வள்ளியப்பா, கா. வேழவேந்தன், பேராசிரியர் அ. பழனிச்சாமி ஆகியோர் பேசினர்; இதனை எதிர்த்துத் திருவாளர்கள் முகம்மது கனி, மா. சு. சம்பந்தம், ரா. பாலகிருஷ்ணன், கே. பழனிப்பன் ஆகியோர் பேசினர்.

தலைவருக்கு உரிமை வழங்கும் தீர்மானம் நிறைவேறியது. எல்லோருக்கும் தம் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்ட தலைவர், சென்ற ஆண்டின் செயலாளர் திரு. ஊ. செயராமன், மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் அழ. வள்ளியப்பா, ஏனைய தலைவர், செயற்குழுவினர் ஆகியோருக்குப் பேரவையின் சார்பில் நன்றி கூறியபின், பேரவை கலைந்தது.

என்று விடியும் எங்கள் வாழ்வு?

மட்டு நகர். முத்தமிழ்த்தாசன்.

இன்றைய இலங்கையின் மொத்த மக்கள் தொகை 86 இலட்சம். இதில் 25 இலட்சம்பேர் தமிழ் பேசும் மக்கள். இங்கு சனநாயக ஆட்சி நடத்துவதாக இலங்கை அரசு சொல்கிறது. சனநாயக ஆட்சியின்கீழ் சிறுபான்மை மக்கள் தங்களின் சகல உரிமைகளுடனும், சுதந்திரமாய் வாழ்கின்றார்கள் என்பதாக வெளி நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் சொல்லிக் காட்டுகின்றது. இலங்கையில் "சனநாயம்" என்னும் போலிப் போர்வையின்கீழ் சிறுபான்மை மக்களாகிய தமிழ்பேசும் மக்கள், தங்கள் சகல உரிமைகளையும் இழந்து, துன்பப்படுக்ன்றனர். துன்பப்படும் மக்களின் துயர் துடைக்க மார்க்கம் அறியாது தவிக்கின்றார்கள் தமிழ் பேசும் இலங்கை மக்களின் தலைவர்கள்.

தமிழன் அரசாங்க உத்தியோகம் பார்க்கின்றான் என்றால், அவன் கட்டாயமாக ஓர் குறிக்கப்பட்ட காலத்திற்குள் சிங்கள மொழியைப் படித்து, சிங்களத்தில் சகல அலுவல்களையும் பார்க்கும் தகுதி பெற வேண்டும். இல்லையேல், அவனுக்கு வேலையில் இருந்து 'கல்தா' கொடுக்கப்படும். இதுதான் சனநாயக ஆட்சியின்கீழ் வாழும் சிறுபான்மை மக்களுக்கு இலங்கை அரசு காட்டும் சலுகை.

பொதுமக்கள் சொத்தாகிய பஸ் வண்டிகள், மோட்டார் வண்டிகளிலெல்லாம் பொறிக்கப்படுவது தனிச் சிங்கள எழுத்துத் தகடுகள். இங்கும் சிறுபான்மைத் தமிழ்மக்களின் தாய் மொழிக்கு இடமில்லை. அரசாங்க காரியாலயத்திற்கு தமிழில் கடிதம் எழுதினால் பதில் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்படுகின்றது. அரசாங்க விளம்பரங்கள், தொலைபேசி விபர அட்டவணை போன்றவற்றில் கூட, சிறுபான்மைத் மக்களின் தாய் மொழிக்கு இடமில்லை. இதுதான் இலங்கையின் சனநாயக ஆட்சி.

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி, அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கின்றது அரசாங்கம். விரைவில் அங்கு வாழும் தமிழ் மக்கள் சிறுபான்மையோராகி, சிங்கள மக்களால் நெருக்கப்படுவதென்பது உண்மை.

பல்கலைக் கழகப் பரீட்சையில் முதலாவதாகத் தேறி, அரசாங்கத்தின் நன்கொடைப்பணம் பெற்று வெளி நாடு சென்று படிக்கும் தகுதியை ஒரு தமிழ் மாணவன் பெற்றாலும், அந்நன்கொடைப்பணம் மூன்றாவதாகவோ நான்காவதாகவோ வந்த ஒரு சிங்கள மாணவனுக்குக் கொடுக்கப்படுகின்றது. இதன் காரணம் வெளிநாடு சென்று படிக்கும் எல்லோரும் சிங்கள மாணவர்களாக இருக்கவேண்டும் என்பதே சிங்கள அரசாங்கத்தின் கொள்கை.

ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்க உயர்தர உத்தியோகத்தை வகிக்கும் தகுதியை ஒரு தமிழன் பெற்றிருந்தால், அவன் தமிழன் என்ற காரணத்தால் அந்தப் பதவியை வகிக்கும் தகுதியை இழக்கின்றான். இதுதான் இன்றைய இலங்கை அரசு நடத்தும் "மக்களாட்சி".

ஈழத்தை வள நாடாக்கிய தமிழனை "கள்ளத்தோணி" என்னும்பெயரைச் சூட்டி கப்பல் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள் சிங்களத்தலைவர்கள். மற்றவர்களையும் கப்பல் ஏற்ற மார்க்கம் தேடுகிறார்கள். இதுதான் இவர்கள் தமிழர்களுக்கு இன்று தெரிவிக்கும் மனப்பூர்வமான நன்றி.

அன்று தமிழன் இலங்கையில் கால் வைத்திராவிட்டால், இன்று இலங்கையின் பொருளாதாரத்திற்கு உறுதுணை செய்யும் தேயிலைத் தோட்டங்கள், கொக்கோ தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள் இவையெல்லாம் தோன்றியிருக்குமா? தமிழ் மக்களின் தியாகம், தீரம், வீரம், ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நாடுதான் ஓர் சுதந்திர நாடாக இன்று திகழமுடியுமா?

150 வருடங்கள் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழும் தமிழ்மொழி சிறப்போடு வாழ்ந்தது; ஆனால் இலங்கை சுதந்திரமடைந்து சனநாயக நாடானதும், பெரும்பான்மை மக்களாகிய சிங்களவரின் ஆட்சியின் கீழ் தமிழ் சொல்லமுடியாத துன்பப்படுகிறது. இலங்கையினின்றும் தமிழ்மக்களும், தமிழ் மொழியும் அழிக்கப்படுமோ என்று பயப்பட வேண்டியுள்ளது, இன்றைய நிலமை.

சிறுபான்மை இனத்தவரைத் துரத்தியடித்த பெரும்பான்மை இனங்கள் உலகில் வாழ்ந்ததில்லை. அப்படிச் செய்த நாடுகள் நலிவுற்றன. இது சரித்திரம் கண்ட உண்மை.

உலகத்தைக் கதிகலக்கிய செர்மனி அழிந்தது ஏன்? அங்கிருந்த சிறுபான்மை மக்களாகிய யூத மக்களை விரட்டியடித்ததால். யூத மக்களின் விஞ்ஞானத்திறன், கைத்தொழிற் திறன், வர்த்தகத் திறன், செர்மனியை வான் நோக்கி உயர்த்தியது. அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். செர்மனி என்ன ஆனது?

ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்டி வைத்த மாவீரன் நெப்போலியன் தோன்றிய பிரான்ஸ்! பல துறைகளிலும் முதன்மையான இடத்தை வகித்த பிரான்ஸ்! வீழ்ச்சியடைந்தமைக்கு காரணம் என்ன? தொகையில் மிக மிகக் குறைந்த சிறுபான்மையிலும் சிறுபான்மையரான ஹியூசி நோட்டீஸ்கள் அந்நாட்டில் இருந்து விரட்டப்பட்டதால்தானே? இவர்கள் சென்றதும் பிரான்ஸ், வர்த்தகம், கைத்தொழில், நுண்கலை ஆடை நெய்தல், ஆகியவற்றில் பின்தங்கியது. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும்ஏற்பட்ட போட்டியில் பிரான்ஸ் தோல்வியுற்றது; வீழ்ந்தது; அழிந்தது.

இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்ந்து நீடித்தால், பிரான்ஸ் செர்மனி போன்ற உலக வல்லரசுகளுக்குக் கிடைத்த பாடம் இலங்கைக்கும் கிடைக்கும். இலங்கையில் அனாதைகளாகச் சாகும் தமிழர்களாகிய எங்களுக்காக - எங்கள் வாழ்விற்காக - குரலெழுப்பி ஆதரவு காட்டும் குணம் ஏனோ இன்னும் தாய்த் தமிழக மக்களுக்குப் பிறக்கவில்லை. என்று விடியும் எங்கள் வாழ்வு? ★

வெளிவந்து விட்டது :

கண்ணதாசனின்
கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.



பைந்தமிழ்ப் பதிப்பகத்தின்
முதல் வெளியீடு.

★ சித்தத்தில் ஒளிவீசும்
தத்துவக் கட்டுரைகள்.

★ வித்தகர்கள் பாராட்டும்
இலக்கியக் கட்டுரைகள்.

★ தித்திக்கும் தீஞ்சுவைசேர்
தேன்பாங்குச் சிறுகதைகள்.

★ சித்திரத்துத் தமிழ்வடிக்கும்
சிறப்புமிகு நாடகங்கள்.

இதுவரை நூல்வடிவமாக வெளிவராத எழுத்தோவியங்கள் அனைத்தும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

படிப்பகங்கள், நூலகங்கள், பைந்தமிழர் இல்லங்கள், கருத்தறியும் துடிப்புடையோர் கையில் எல்லாம் இருக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.

விலை ரூபாய் 2-50

பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் 75 காசுகள் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்களுக்கு 25 சதவிதம் கழிவு உண்டு.

விற்பனை உரிமை :

தென்றல்

2/127. மவுண்ட்ரோடு,
சென்னை-6.

அடுத்த இதழில் :

ஈ. வெ. கி. சம்பத்

அவர்கள் எழுதும்

கருத்துவிளக்கக் கட்டுரை

"நமது பாதை"

இடம் பெறுகிறது.

எண்ணம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

எண்ணங்களால்-காலங்களும், வேகங்களும் கணிக்கப்பட்டு விட்டன.

காலங்களையும் வேகங்களையும் கணித்து வைத்திருக்கும் எண்ணம்—

அந்த எண்ணத்தால்;

இன்னும் தன் எண்ணம் பிறந்த காலத்தையும், அது செல்லுகிற வேகத்தையும் எவ்வளவு என்று மட்டும் கணிக்கவில்லை.

ஆனால்—

எண்ணம் பிறந்த காலத்தைக் கணிக்கமுடியாத எண்ணம்;

உலகம் பிறந்த காலத்தை எண்ணிவிட்டது.

கணித்துவிட்டது.

பத்துநாட்களுக்கு முன்னர்-உத்தேசமாகச் சொல்லிவிட்டது.

உலகத்தின் ஆயுள்—

முன்னூறு கோடியிலிருந்து-அறுநூறு கோடி ஆண்டுகளாம்!

இந்த எண்ணம்;

"உலகத்தைப் பாயாகச் சுருட்டிக்கொண்டான்.

கக்கத்தில் வைத்து இடுக்கிக்கொண்டான்.

கடலில் போய் ஒளிந்துகொண்டான்."

என்று முட்டாள்கள் எழுதிவைத்த கட்டுக்கதையை—

உண்மையென்று எண்ணுகிறவர்களின் எண்ணத்திலிருந்து உதித்ததல்ல.

உலகையே தங்களின் எண்ணங்களுக்குள்ளே அடக்க எண்ணுபவர்கள்—

தங்களின் எண்ணங்களின் எடையைவிட, இந்த உலகத்தின் எடை எவ்வளவோ சிறியது என்று எண்ணுபவர்கள்—

இந்தச் சிறிய உலகத்திலிருந்துகொண்டே, வேறு புதிய உலகத்திற்குப் போக எண்ணுபவர்கள்—

அவர்களால் எண்ணிக் கணிக்கப்பட்ட எண்ணமாகும்.

ருஷ்ய நாட்டு உலகியல் அறிஞர்கள்தான் உலகின் வயதை, இப்படி எண்ணிச் சொல்லியவர்கள்.

உலகம் தோன்றிய காலம்;

முன்னூறு கோடி ஆண்டுகட்கு முற்பட்டது.

அறுநூறு கோடி ஆண்டுகட்குப் பிற்பட்டது.

எண்ணம்—

முன்னூறு கோடி ஆண்டுகளைத் தாண்டிச் சென்றது.

ஆதாரங்களோடு அணு அணுவாக ஆராய்ந்தது.

அவ்வாராய்ச்சியிலிருந்து உலகம் தோன்றிய காலத்தை எண்ணிக் கணித்தது.

அந்தக் கணிப்பிலிருந்து உலகின் வயதை உத்தேசமாகச் சொல்லியிருக்கிறது.

உலகின் வயதையே எண்ணிச் சொன்ன எண்ணம், உலகம் பாராட்டும் உயர்ந்த எண்ணமே.

ஆனால்—

உலகு தோன்றிய காலத்தையே கணித்துச் சொன்ன எண்ணத்தைவிட—

மிகப் பெரிய எண்ணம் வேறொன்றுண்டு.

எண்ணங்களிலேயே பெரிய எண்ணமது.

எண்ணங்களுக்கெல்லாம் ஆணிவேர் போன்றது.

எல்லோருடைய எண்ணங்களிலும், எப்போதும் இருந்துகொண்டே இருக்கும் எண்ணமது.

எண்ணங்களிலிருந்து பிறந்த செயல்களையும், செயல்களை இயக்கிக்கொண்டிருக்கும் எண்ணங்களையும் சேர்த்து இயக்கிக் கொண்டிருக்கும் எண்ணமது.

அந்த எண்ணம்—

எண்ணுவதெல்லாம் நடக்கவேண்டும்—

என்று எண்ணுகிற எண்ணந்தான்.

இப்படி எண்ணாத எண்ணங்கள் இல்லை.

இந்த எண்ணமே இல்லாத எண்ணங்களும் இல்லை.

எண்ண வேண்டுமென்பதற்காக யாரும் எண்ணுவதில்லை.

வாழ வேண்டுமென்பதற்காகத்தான் எண்ணங்கள் பிறக்கின்றன.

எண்ணாமலேயே வந்துவிடுகிறது பிறப்பு.

விரும்பாமலேயே நிகழ்ந்துவிடுகிறது மரணம்.

பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடையே அமைந்துவிடுகிறது வாழ்க்கை.

பிறப்பும் ஒருமுறையே வருகிறது.

இறப்பும் ஒருமுறையே நிகழ்கிறது.

வாழ்வும் ஒருமுறையே அமைகிறது.

ஒருமுறை வாழ்கின்ற வாழ்க்கைக்காக உலகம் முழுவதையும் எண்ணுகிறது எண்ணம்.

வாழவேண்டுமென்ற தேவையினாலேயே எண்ணங்கள் வளர்ந்தன.

எண்ணினால்தான் வாழமுடியும் என்ற எண்ணத்தினாலேயே வாழ்வின் தேவைகள் வளர்ந்தன.

தியாகன்

வாழ்க தமிழகம்

கவிஞர் முடியரசன்

நல்லவர் ஆட்சியில் தங்கி வளர்ந்திடும்
நாடு செழித்திடவே
அல்லவை நீங்கிட நாட்டினிற், செந்தமிழ்
ஆட்சி தழைத்திடவே!

வான முகட்டினைத் தொட்டு நிமிர்ந்திடும்
மாமலைத் தாயகமே
கானம் இசைத்திடும் பேரருவித் திரள்
காட்டி மிளிர்ந்திடுமே

ஓடிய ஆறுகள் அங்கங்கு கால்களை
ஊன்றிய ஊர்களெலாம்
கூடிய செந்நெல் கொழித்திடச் செய்திடும்
கோலத் தமிழகமே

கல்வி வளர்ந்திடப் பண்பு செழித்திடக்
கற்றவர் வாழியவே
செல்வ மிகுந்திட எங்கள் தமிழகம்
சீருடன் வாழியவே

சென்ற இதழ்த் தொடர்ச்சி

நெஞ்சு நிறைந்தது!

நாகலிங்கம் "சோமு எங்கே" என்று கேட்பதற்குள், அவன் இன்னைக்கி சீக்கிரமாச் சாப்பிட்டுட்டு சீக்கிரமாவே தூங்கிட்டான்!" என்று சொல்லிச் சமாளித்தாள் சொர்ணம். நாகலிங்கம் அதை நம்பிக் கொண்டு, சாப்பாட்டை முடித்துவிட்டு, நித்திரையில் ஆழ்ந்தான்.

பொழுது விடிந்தது. வழக்கத்துக்கு மாறாக சீக்கிரம் எழுந்து வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள் சொர்ணம். அவளது குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்க ஆரம்பித்தது. நாகலிங்கம் எழுந்திருப்பதற்குள் சோமுவைப் பார்த்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், நடந்தவற்றை நாகலிங்கத்திடம் சொல்ல வேண்டாம் என்று வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்திருந்தாள்.

சோமு எழுந்து வருவான் என்று நெடு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் வரவே இல்லை. "இவ்வளவு நேரமாகவா தூங்குகிறான்" என்று எண்ணியபடி அவன் அறையின் கதவைத் திறந்தாள். அவள் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. சோமுவைக் காணோம். உள்ளே சென்று பார்த்தாள். அவன் எழுதி வைத்த கடிதம் ஒன்று மேஜையின் மீது இருந்தபடி, ஜன்னல் வழியே வந்துகொண்டிருந்த காற்றுக்கு ஏற்ப அசைந்துகொண்டிருந்தது. அதை எடுத்துப் படித்தாள்!

அன்புள்ள அண்ணனுக்கு,

வணக்கம். எனக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. இனி நான் வாழ விரும்பவில்லை. அனாதைகள் வாழ்வதில் அர்த்தமே இல்லை; தயவு செய்து இந்த அனாதையை மறந்து விடுங்கள்! இவ்வளவு நாட்கள் என்னைக் காப்பாற்றி வந்த உங்களுக்கும் அண்ணியாருக்கும் என் வணக்கங்கள்.

அன்புள்ள,
சோமு,

கடிதத்தைப் படித்த சொர்ணத்தின் நிலையை வர்ணிக்க வார்த்தை இல்லை. ஓடிச் சென்றபோதும், தான் அவனுக்கு இழைத்த தீங்கைக் குறிப்பிடாமல், அதை மறைத்து கடிதம் எழுதிக் வைத்துச் சென்றிருக்கும் சோமுவின் பண்பை எண்ணும்போது அவள் மனச்சாட்சி அவளையே வதைத்தது.

உடனே நாகலிங்கத்தை எழுப்பி, அவனிடம் கடிதத்தைக் காண்பித்து, முதல் நாள் தான் நடந்துகொண்ட விதத்தையும் சொன்னாள்; அதைக் கேட்ட நாகலிங்கம், "நீ பெண்ணல்ல! பேய்! பேய்!" என்று கதறினான். சொர்ணம் வாய் பேசவில்லை. தன் தவற்றை ஒப்புக்கொண்டாள்; அதற்காக மனம் வருந்தினாள்.

அதன் பின்பு நாகலிங்கம் எங்கெங்கோ தேடினான் "காணவில்லை, தெரிவிக்கவும்" என்று விளம்பரம் செய்தான்! "சோமுவுக்கு, எங்களை மன்னித்து உடனே வரவும" என்று பத்திரிகைகளின் மூலமாக அழைப்புக்கள் விடுத்தான்! அந்த விளம்பரங்கள் வெளியான பத்திரிகைகள் மட்டும் நாகலிங்கத்தின் வீட்டுக்கு வந்தனவே தவிர, சோமு திரும்பி வரவில்லை.

நினைவுப் பாலம் அறுந்தது. சொர்ணத்தம்மாளின் நெஞ்சில் துயரம் நிறைந்தது. நேத்திரத்திலிருந்து கிளம்பும் நீரைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டபடி அந்த அம்மாள் திரும்பிப் பார்த்தாள். நாகலிங்கம் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே நன்றாகத் தூங்கிப் போனார் சொர்ணத்தம்மாள் தானும் படுக்கையை நோக்கிச் சென்றாள்.

இரவு முழுதும் சொர்ணத்தம்மாள் கனவுகளில் சோமுவைச் சந்தித்தாள். சோமு, வீட்டுக்கு வெளியே நிற்பது போலவும், தான் அழைப்பது போலவும் அவன் வீட்டுக்குள் வர மறுப்பது போலவும் கனவுக் காட்சிகள் தொடர்ந்தன.

"வா சோமு! வா! என்னை மன்னிச்சிடு! என்னை மன்னிச்சிடு! ஒங்க அம்மா ஒன்னை அடிச்சாங்கன்னு இப்படியா கோவிச்சுக்கிட்டுப் போவே! நானும் ஒங்க அம்மா மாதிரிதான். அம்மா மாதிரிதான்..." என்று புலம்ப ஆரம்பித்தாள். புலப்பம்அதிகமாகியது. அப்படியே விழித்துக் கொண்டாள். பொழுது நன்றாக விடிந்திருப்பதையும், தான் புலம்புவதையும் புரிந்துகொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள்.

"அண்ணீ" என்று ஒரு குரல் கேட்டுத் திரும்பினாள். அவள் கண்களை அவளால் நம்பமுடியவில்லை. சோமு தான் வந்து கொண்டிருந்தான். அவனுடன் ஒரு பெண் கைக் குழந்தையுடன்வந்து கொண்டிருந்தாள்.

தமிழ்ப்பித்தன்

"சோமு" என்றாள் சொர்ணத்தம்மாள் அன்பு ததும்ப!

"அண்ணீ!" என்று அவள் காலில் விழுந்தான் சோமு.

அவனைக் கை கொடுத்துத் தூக்கி நிறுத்திய சொர்ணத்தம்மாள், "சோமு என்னை மன்னிச்சிடு! என்னை மன்னிச்சிடு" என்று தழதழத்த குரலில் கூறினாள்.

"நீங்க என்ன குற்றம் செய்தீங்க அண்ணீ! நான் தானே சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போனேன்! நீங்க தான் என்னை மன்னிக்கணும் என்றான் சோமு.

சொர்ணத்தம்மாள், கண்களில் துளிர்த்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, சோமுவுடன் வந்திருக்கும் பெண்ணைச் சுட்டிக்காட்டி, "இது..." என்று வார்த்தையைத் தொடங்கினாள். உடனேசோமு "அண்ணீ இது என் மனைவி மல்லிகா! இது பன்னீர்ச் செல்வம்! இங்கே இருந்து நான் ஓடிப்போனேனில்லே, இவங்க அப்பாவை சந்திச்சேன்! அவருஎனக்கு ஒருவேலை கொடுத்து என்னை மலேயாவுக்குக் கூட்டிட்டுப் போயிட்டாரு. அப்புறம் என்னோட குணத்தைக் கண்டு மகளையே கட்டிக் கொடுத்திட்டாரு" என்று அறிமுக வேலையைச் செய்து முடித்தான்.

அவன் இதைச் சொல்லும் போது, மல்லிகாவின் முகத்திலே நாணம் விளையாடிக் கொண்டிருந்தது.

தூங்கிக் கொண்டிருந்த நாகலிங்கம், பேச்சுச் சத்தம்கேட்டு எழுந்தார்; அறையை விட்டு வெளியே வந்தார். முதலில் சோமுவை அவருக்கு அடையாளம் தெரியவில்லை. சோமு, "அண்ணு" என்று அன்பு ததும்ப அவரை அழைத்தான். "சோமு" என்று கதறலுடன் அவனை அணைத்துக் கொண்டார் நாகலிங்கம். ஆனந்தம் இருவர் கண்களிலும் நீர் முத்துக்களை உருவாக்கிக் கொண்டிருந்தது. கண்களைத் துடைத்தபடியே, "சோமு எங்களை மன்னிச்சிரப்பா! ஒன் அண்ணி ஒரு தவறைச் செய்துட்டு எவ்வளவு வருஷமா வருத்தப்பட்டுக்கிட்டு இருக்கா தெரியுமா! தினம் உன்னை நெனச்சு நெனச்சுக் கண்ணீர் விடுவா!" என்றார்.

"அண்ணு! தவறு செய்யிறவங்களெல்லாம் தாங்கள் செய்த தவறை நெனச்சு மனம் வருந்துனலே போதும், அவங்களுக்கு மன்னிப்புன்னு ஒண்ணு வேண்டியதில்லையின்னு நீங்கதானே அடிக்கடி சொல்வீங்க" என்று சமத்காரமாகப் பதில் தந்தான் சோமு.

சோமுவுடன் வந்திருப்பது அவன் மனைவியும் குழந்தையும் என்பதை அறிந்து கொள்ள நெடுநேரம் பிடிக்கவில்லை நாகலிங்கத்துக்கு. நாகலிங்கத்தைப் பார்த்தவுடன் அந்தக் குழந்தை சிரிப்பைச் சிந்தியது; பெரியப்பாவைச் சந்தித்து விட்டோம் என்ற பெரு மகிழ்ச்சிதான் காரணமாக இருக்கலாம்.

பன்னீர்ச் செல்வத்தை வாஞ்சையுடன் எடுத்துக் கொண்ட நாகலிங்கம், அவனுக்கு முத்தங்களை வாரி இறைத்தார்.

தாலாட்டுப் பாட தன் வீட்டுக்கு ஒரு குழந்தை கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்த சொர்ணத்தம்மாளின் ஆசைநெஞ்சு, இப்போது நிறைந்துவிட்டது.

★

1-3-61 முதல் வெளிவருகிறது.

சந்துமுனையிலே சிந்துபாடும் மந்த மதியினர்களுக்கு அறிவு புகட்ட!

காசுக்குக் கற்பைவிற்கும் காரிகைகளுக்கு, கற்பின் வலிமையை தெளிவு படுத்த!

துன்பத்தின் பிடியிலே துவண்டு கிடக்கும் ஏழைப் பாட்டாளி களின் துயர் துடைக்க!

"இன்பம்"

ஆசிரியர் : எழுத்துவேந்தன்

திங்கள் இருமுறை, விலை. 16 காசு.

இதுவும் பாண்டியன்பதிப்பக வெளியீடுதான். பிரதி ஒன்றுக்கு 50 காசு வீதம் முன்பணம் கட்டி இன்றே ஏஜண்டாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

'இன்பம்'
கோதண்டராமன் கோயில் தெரு,
சென்னை-33.

வெண்பாப் போட்டி

'வெறி' எனத் தொடங்கி 'சரி' என முடிக்க.

வெறியகற்றி மெய்ப்பொருளை வேட்டுமிகப் போற்றி
நெறிபுகட்டி நீர்மையினில் நின்று - மறுத்துரையாச்
சான்ருண்மை பூண்டொழுகல் செந்தமிழர் தொன்மரபு;
சான்ருேர்க்(கு) அதுவே சரி.

—சா, கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

வெறிபிடித்த தீச்செயலால் வண்டமிழை வீழ்த்த
நெறியிழந்து முற்பட்டோர் நாவை - விரைந்தின்றே
போயறுப்பேன்; நில்லேன்; பொறுத்திரேன் பெற்றெடுத்த
தாய்தடுத் தாலும் சரி.

— பி. கோ. கோவிந்தராசன், ஆமதாமாத்-2.

வெறியானேன் பொன்னிழைத்த மேனியளே! உன்றன்
பிறைநுதலும் காந்த விழியும் - நறவிதழும்
வில்வக் கனிமார்பும் மேண்டுமடி முத்தமிட!
சொல்வாய்ஓர் வார்த்தை "சரி"!

—க. நா. ராசன், சென்னை-12,

வெறியூட்டு நாறுமலர் வேய்குழலாய், வாராய்!
செறிதொடீஇ சேர்!'என்றீர்; அத்தான் - நெறியிதுவோ?
மாற்றுமொழி கூறு தெனமணந்தால் மற்றுநீர்
சாற்றுவ தெல்லாம் சரி.

—சா. கா. சா. தளிர்மேனி, சித்தையன்கோட்டை,

வெறிவேண்டும் நாட்டின் விடுதலையில்; அஃதில்
நெறிவேண்டும் அவ்வெறியை ஞாலம் - அறிந்துணர!
நாவிருந்தும் நாட்டின் விடுதலையைக் கேட்காதோர்
சாவதே நாட்டில் சரி.

—பா. ஐ. முகம்மதுஅலி, செங்கற்பட்டு.

"வெறிகொண்டு கோலோச்சும் வீணவட நாட்டின்
நெறியற்ற வெங்கோல் நிலைப்பதோ?- அறிவுடைய
செந்தமிழ்ப் பொன்னுட்டீர்! சிந்திப்பீர்! போர்முகத்தில்
சந்தித்து வேறல் சரி."

—சி. புரட்சிவாணன், கிருங்காக்கோட்டை.

வெறித்தென்னை நோக்கினுர்; வெட்கிக் குனிந்தேன்
பறித்தென் கரத்தைப் படுக்கையில் தள்ளினுர்!
வேலை தவருமல் வெய்கதிரோன் தோன்றவே
சேலையைச் செய்தேன் 'சரி'.

—தி. இர. வெங்கடேசன், இலயோலாக் கல்லூரி.

வெறியர் சனத்திரளில் விண்மணிபோ லிங்கு
செறிவூட்டும் காதலில்நாம் தோய்ந்தென்?- அறிந்தேன்
பருகி எதிர்நிற்றல் என்பயனே? பாவாய்!
திருமணமே என்றும் சரி.

மு. வரதராசன், துறையூர்.

வெறிகொண்டு காமத்தால் வேசியரின் காலில்
களிகொண்டு வீழ்கின்ற காமுகர்கள் பாரில்
திரிவற்றித் தீய்ந்த துகள்சாம்பற் போன்று
சரிகின்ற வீழ்ச்சி சரி.

—புதுவை இரத்தினசனர்த்தவன், தாம்பரம்.

வெறிபெற்ருர்! செந்தமிழை வீழ்த்துநினை வுற்ருர்!
நெறிகெட்ட அவ்வடவர் நெஞ்சில்! - அறிந்தே
கிழக்கெழுந்த செங்கதிர்போல் சீறிக் கிளம்பி
சழக்கர்தம் கோட்டை சரி!

—வில்லவன்கோதை, காஞ்சி.

வெறிபிடித்த நாய்போல வேற்ருர்தம் நாட்டில்
சொறிபிடித்துச் சோணுட்டார் சோறென்ன அந்நாட்டார்
பண்டாண்ட நாட்டைப் பறித்தாளும் பாழ்வடவர்
சண்டாளக் கோலே! சரி!

—இரா. இளமுருகு, தடாகம்.

வெறிதே தலைக்கனத்தால் வீம்பால் தமிழர்
உறையும் பெரும்பதியை உற்றபெயர் கூறி
அழைக்க மறுத்தர சாளும் நெறியில்
சழக்கர் கருத்தைச் சரி!

—ச. வடிவேலன், வேலாயுதம்பாளையம்.

வெறிஞர்க்கு நல்வார்த்தை வீணுகும் என்றே
அறிஞர்க்கு யாருரைத்தார் அன்பே - அறிந்தறிந்து
கண்டதனுல் சொன்னுர் கல்லார்கள் ஆட்சியினில்
சண்டைகளே சான்ரும் சரி.

—மணவை, கா. மாரன், மதுரை.

வெறிகொண்டா ரெல்லாம் விரைந்து பதவிப்
பொறிதன்னைக் கைப்பற்றிப் போகும் - முறையால்
"பழுதுண்டு" சொன்னேம்! பயனடைய நீதி
தழைத்தால் நமக்குச் சரி.

—கோ. சோ. ஜெயபால், தெற்குப்பொய்கைநல்லூர்.

வெறிபிடித்தோர் ஆள மிகுசெல்வம் எல்லாம்
பறிகொடுத்துப் பார்த்திருத்தல் நன்ருே? - நரிக்குணத்தார்
சூழ்ச்சிக்கே நாமடிமை ஆகாமல் அன்னுரை
வீழ்ச்சிசெய்த லன்ருே சரி.

—கு. கூத்தரசன், சத்திரம்கருப்பூர்.

"வெறியூட்டும் மெய்யழகின் வேதனையால் வாடிச்
சிறையிடை புள்போல் சிதைந்து - நிறைஇடரால்
மேதினியில் தாலியற்ற மங்கையர் வாழ்தலினும்
சாதலே மிக்க "சரி"

—பத்மா, சென்னை-12.

வெறிபிடித்த நாயாய்நான், வீதியிலே சுற்றல்
முறையாமோ முல்லையே! நீபோய் - அறிவார்ந்த
அப்பாவைக் கண்டென் அவலம் ஒழிக்கவழி
தப்பாமல் காணல் சரி.

—திருமலையன், அகிலாண்டபுரம்.

வெறியிருந்தால் நம்முடைய வெற்றிக்கே ஊரும்
பொறுமையுடன் நாமிருந்து போற்றும் - அறவழியில்,
போர்புரிந்து தாயகத்தைப் பெற்றிட நாம்கொண்ட
நேர்வழியே என்றும் சரி.

—பி. ரெங்கநாதன், குரோம்பேட்டை.

வெறிசெய் நிலவேநான் வேசியா? தென்றல்!
நெறிபிறழ்ந்தா நான்போனேன்? நீசொல் - அறியாமல்
காதலரென் மேலையம் கண்டார்பின் என்றனுக்குச்
சாதலன்ருே கொள்ளச் சரி?

—ச. ஆதிராஜன், திருமலை.

வெறிக்கருங் கூந்தலார்க்குத் தந்தே விடையைக்
குறித்தநாள் சென்றறிவுக் குன்றே! மறத்தமிழை
மேவுமிசைக் குன்றேத்த வீரப்போர் செய்யங்கே
சாவுவந் தாலும் சரி.

—சி. தணலன், மதுரை.

வெறிகொள்ளல் வேண்டாம்நம் வாழ்க்கையில்; நல்ல
குறிகொண் டெதிலும் குறையா - நெறிகொண்டே
இன்னலைப் போக்கிநல் லின்பம் உறுதற்குத்
தன்னலம் நீக்கல் சரி.

—பூரிவாக்கம் பாட்சாகிருஷ்ணமூர்த்தி. செங்கை,

வெறியாம் நெருப்பினிலே வீழ்ந்தலைவாரை
பொறையால் திருத்திய புத்தர் - பெருமையுள்ள
காந்தி இயேசுநபி காட்டும் வழிசென்று
சாந்தம் வளர்த்தல் சரி.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

வெறிபிடிக்க வைத்தாய் வியனழகால் கட்டை
முறியடிக்க வைத்ததடி மூரல் - கரிபடிந்த
சாதிப்பேய்க்(கு) அஞ்சாமல் சங்கத் தமிழ்ப்பண்பைச்
சாதிக்கச் சொன்னுல் 'சரி'!

—காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

வெறிவேண்டும் நாட்டு விடுதலையை வேண்டும்
குறியுடையார்க்(கு)! அஃதின்றி கொள்கை - நிறைவேரு(து)!
ஓய்ந்துநிற்றல் பேதமையே, உள்ளச்சம் கொள்வதிலும்
சாய்ந்துவிழல் மெத்தச் சரி.

—கோ. கஸ்தூரி, சென்னை-7.

ஆசிரியர் கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு, தொலைபேசி எண் 83510.